பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 தை 18 சனிக்கிழமை (31.01.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:066

# அரசாங்கத்தின் அறிவிப்பை புலிகள் அடியோடு நிராகரிப்பு

## மக்கள் வெளியேறப் பாதுகாப்பு என்பது ஏமாற்று முயற்சி

கொழும்பு, ஜனவரி 31

வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் சிக்குண்டுள்ள மக்கள் அங்கிருந்து வெளியேறுவதற்குப் பாதுகாப்பான வழி அமைத்துக் கொடுக்கப்படும் எனக் குறிப்பிட்டு, அடுத்த 48 மணி நேரத்துக்குள் அவர்கள் வெளியேறுவதற்கு அனுமதிக்கும்படி புலிகள் இயக்கத்துக்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வியாழக்கிழமை மாலையில் பகிரங்க அறிக்கை மூலம் விடுத்த கோரிக்கையைப் புலிகள் இயக்கம் அடியோடு நிராகரித்து விட்டது.

இந்த அறிவிப்பு உலகத்தை ஏமாற்றும் சூழ்ச்சி எனவும் புலிகள் விமர்சித்திருக்கின்றனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அறிவிப்பு 'இரண்டு நாள் போர்நிறுத்தப் பிரகடனம்' என அர்த்தப்படுத்தப்படும் பின்னணியில், நேற்றும் அரசுப் படைகளின் கொடூரமான தாக்குதல்கள் காரணமாக குழந்தைகள், பெண்கள் உட்பட 28 பேர்வரை கொல்லப்பட்டு அறுபதுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர் என்றும் புலிகள் குற்றம் சுமத்தினர்.

இவ்விடயத்தை ஒட்டி புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் நேற்றுப் பிற்பகலில் விடுத்த அறிக்கையில் தெரிவிக்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தளபதி வன்னிக்கு விஜயம்

கொழும்பு, ஜன.31

இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நேற்று வன்னிப் பகுதிக்குச் சென்று மோதல் நடைபெறும் பிரதேசங்களை நேரில் பார்வையிட்டு, அங்கு இராணுவம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்தார். அவருடன் இராணுவ உயர் அதிகாரிகளும் சென்றிருந்தனர் என இணையத்தளத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

வன்னிப் பகுதியிலிருந்து இடம்பெயரும்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயப் பிரதேசம் மீது நேற்று நடத்தப்பட்ட தாக்குதலில் 28 பேர் பலி

வவுனியா, ஜன.31

புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு, தேவிபுரம் ஆகிய பகுதிகளில் பாதுகாப்பு வலயமாக அரசால் பிரகடனம் செய்யப்பட்ட பிரதேசங்கள் மீது நேற்று மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் 28 பொது மக்கள் கொல்லப்பட்டனர், 60க்கும் அதிகமானவர்கள் காயம் அடைந்தனர் என்று இணையத்தளத் தகவல்கள் தெரிவித்தன.

புதுக்குடியிருப்பு வைத்தியசாலையை அண்டிய பகுதிகளில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

உடையார்கட்டில் அமைந்துள்ள உலக கத்தோலிக்க திருச்சபையின் தொண்டு நிறுவனமான 'கியூடெக்' அலுவலகம் மீதும் பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் அதன் உணவுக் களஞ்சியங்கள் எரிந்தன என்று இணையத்தளங்கள் தெரிவித்துள்ளன. (அ-1)

## உடனடி யுத்த நிறுத்தத்தை வலியுறுத்தி தென்னாபிரிக்க காங்கிரஸ் அறிக்கை

கொழும்பு, ஜன. 31

இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் உடனடி யுத்த நிறுத்தத்தில் ஈடுபடுமாறு தென்னாபிரிக்காவின் ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் கேட்டுக்கொண்டுள்ளது.

இலங்கை யுத்தம் இனப்படுகொலை கள்கட்டத்தை எட்டிவிட்டது என மனித உரிமை அமைப்புகளை மேற்கோள் காட்டிக் கருத்துத் தெரிவித்த ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் இது குறித்து மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையில் உருவாகிவரும் மனிதாபிமான நெருக்கடி குறித்து ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் தனது ஆழ்ந்த கவலையை தெரிவித்துள்ளது.

மனித உரிமை கண்காணிப்பகத்தின் சர்வதேச கண்காணிப்பு ஏற்பாடுகளில் இலங்கை மோதல் இன அழிப்புக் கட்டத்தை எட்டியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மனிதாபிமான யுத்தநிறுத்தத்திற்கு அழைக்கிறது ஐரோப்பிய ஒன்றியம்

### இருதரப்புகளிடமும் அவசர கோரிக்கை

கொழும்பு, ஜன. 31

மோதல் நடைபெறும் பகுதிகளில் சிக்கியுள்ள மக்கள் அந்தப்பகுதியிலிருந்து வெளியேறுவதற்கு உதவியாக மனிதாபிமான யுத்த நிறுத்தமொன்றை கடைப்பிடிக்குமாறு ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் கேட்டுக் கொண்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் மனிதாபிமான ஆணையாளர் லூயிஸ் மைக்கல் விடுத்துள்ள அறிக்கையிலேயே இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் மனிதாபிமான அவலம் தீவிரமடைகின்றது. மோதலில் சிக்கியுள்ள மக்கள் எதிர்கொள்ளும் மோசமான நிலை குறித்து நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம்.

மக்களின் துயரத்தையும் மேலும் குருதி

(16 ஆம் பக்கம் பார்க்க)

## லஸந்தவின் கொலை: சந்தேகத்தில் ஒருவர் கைது

கொழும்பு, ஜன.31

'த சண்டே லீடர்' ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்கவின் கொலையுடன் தொடர்புடைய சந்தேநபர் ஒருவர் பொலிஸாரால் நேற்றுமாலை கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

பொலிஸார் மேற்கொண்ட தீவிர விசாரணைகளின் அடிப்படையிலேயே இந்நபர் தெஹிவளை, அத்திடியப் பகுதியில் கைதுசெய்யப்பட்டார் என்றும் அவர் சொன்னார். (16 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றும் மோதல்கள் தொடர்ந்தன

கொழும்பு, ஜன.31

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு, புளியம்பொக்கணை, உடையார்க் கட்டுக்குளம், பள்ளிக்குடியிருப்பு, புதுக்குடியிருப்பு தெற்கு மற்றும் முள்ளியவளை கிழக்கு போன்ற பகுதிகளில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

இதில் படைத்தரப்புக்கு சிறியளவில் சேதங்கள் ஏற்பட்டுள்ள அதேவேளை, புலிகள் தரப்பு பாரிய இழப்புக்களை சந்தித்துள்ளது என தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

மோதலை அடுத்து அப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது புலிகளுக்குச் சொந்தமாகவிருந்த வாகனங்கள், கட்டடங்கள் மற்றும் ஆயுத உபகரணங்கள் போன்றன கைப்பற்றப்பட்டுள்ளன எனக்கூறப்படுகின்றது.

## கடந்த இருநாள்களாக கொழும்பில் 23 தமிழ் இளைஞர், யுவதிகள் கைது

கொழும்பு, ஜன.31

சுதந்திர தினத்தை முன்னிட்டு பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு கொழும்பில் நடத்தப்பட்ட தேடுதலில் 23 தமிழ் இளைஞர்கள், யுவதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கடந்த இரண்டு நாள்களாக நடத்தப்பட்ட தேடுதலிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து தேடுதல் நடவடிக்கையில் (16 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்புலிகளின் தற்கொலைப்படகு முல்லையில் தாக்கி அழிப்பு என அறிவிப்பு

கொழும்பு, ஜன. 31

முல்லைத்தீவு கடற்பரப்பில் நங்கூரமிட்டிருந்த கடற்படையினரின் படகுகளை இலக்கு வைத்து தாக்குதல் நடத்த முற்பட்ட புலிகளின் தற்கொலைப் படகொன்று நேற்று அதிகாலை 3 மணியளவில் தாக்கியழிக்கப்பட்டுள்ளது என கடற்படை அறிவித்துள்ளது.

அதற்காக கடற்படையினரின் ரோந்துப் படகுகள் மற்றும் டோராப் படகுகள் போன்றன பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என கடற்படையின் பேச்சாளர் டி.கே.பி.தசநாயக்கா தெரிவித்தார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு மோதல் குறித்த செய்திகளை சுதந்திரமாக வெளியிட அனுமதிக்குக!

### சர்வதேச ஊடகவியல் அமைப்பு இலங்கை அரசிடம் வலியுறுத்து

கொழும்பு, ஜன.31

இலங்கையின் வடபகுதியில் இடம்பெறும் படை மோதல்கள் குறித்து சுதந்திரமாக செய்தி வெளியிடுவதற்கு உள்ள தடையை இலங்கை அரசு நீக்க வேண்டுமென எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த மோதல்கள் குறித்து சுதந்திரமாக செய்தி வெளியிடுவதற்கு உள்நாட்டு, வெளிநாட்டு செய்தியாளர்களுக்கு அனுமதி வழங்குமாறு அந்த அமைப்பு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பல்கலைக்கழகத்தில் தொடரும் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், ஜன.31

வன்னியில் மக்களின் பேரவலத்தை நிறுத்தி இருதரப்பும் சமாதான நடவடிக்கையில் ஈடுபடக் கோரி யாழ்.பல்கலைக் கழகத்தில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்ட வகுப்புப் பகிஷ்கரிப்பு நேற்று ஐந்தாவது நாளாகவும் தொடர்ந்தது.

இந்தப் போராட்டத்தினால் யாழ்.பல்கலைக்கழகத்தின் அனைத்துப்பீடங்களின் சகல செயற்பாடுகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

(1-9)

## வீதிப்போக்குவரத்து கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன.31

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப்பாடசாலை மாணவிகளுக்கு வீதிப் போக்குவரத்து தொடர்பான கருத்தரங்கும் செயலமர்வும் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை நடைபெறவுள்ளன.

(1)

## கொய்யாத்தோட்டத்திலும் நாளை உண்ணாவிரதம்

வண்ணை, ஜன. 31

வன்னி மண்ணில் பேரவலத்திற்குள் சிக்கித் தவிக்கும் தமிழ் மக்களின் விடிவுக்கு சகல தரப்பினரும் உதவும் கோரிக்கையை முன்வைத்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் தொடர் அடையாள உண்ணாவிரதம் நாளை ஞாயிற்றுக்கிழமை கொய்யாத்தோட்டம் கிறிஸ்து ராஜா ஆலய வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

மக்கள், குருமார், அருட்சகோதரிகள் மற்றும் அனைத்துத் தரப்பினரும் உண்ணாவிரதத்தில் பெருமளவில் கலந்து எங்கள் கோரிக்கையை எங்களும் எட்ட வைப்போமென ஏற்பாட்டாளர்களான நீதி சமாதான ஆணைக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (1-160)

## கொமர்ஷல் வங்கி சுன்னாகம் கிளையின் புதிய தொலைபேசி இலக்கங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 31

கொமர்ஷல் வங்கியின் சுன்னாகம் கிளையின் புதிய தொலைபேசி இலக்கங்கள் கடந்த 28 ஆம் திகதி தொடக்கம் மாற்றப்பட்டுள்ளன.

முகாமையாளரின் இலக்கம்: 021 224 0486, பொது இலக்கம்: 021 224 0521, 0522, தொலைநகல் இலக்கம்: 021 224 0523 ஆகும். கிளை முகாமையாளர் இந்த விவரத்தை அறிவித்துள்ளார்.

(1)

## மெய்வன்மை போட்டிகள்

வண்ணை ஜன. 31

குருநகர், சென். ஜேம்ஸ் மகளிர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு சென்.ஜேம்ஸ் தேவாலய வளாகத்தில் அதிபர் திருமதி எல்.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.'சோஆ' நிறுவன நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் ஜே.யூட்வோல்டன் கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினர்களாக புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை வண றோமான் நேசராசா அடிகளாரும் 'கிரிக்கெட்' யாழ்.பிரதேச கணக்காளர் திருமதி மஞ்சுளா யூட்வோல்டனும் கலந்துகொள்வார்கள்.

(1-160)

* * *

யாழ்ப்பாணம், ஜன. 31

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பி.ப 1மணிக்கு அதிபர் ம.ஞானசம்பந்தன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.சித்திரவடிவேலும் சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் வைத்தியசாலை பல்வைத்தியர் வைத்தியகலாநிதி இ.வசந்தகுமாரி, யாழ் கல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ரி.சிவகுமார், இலங்கை வங்கியின் கோப்பாய் கிளை முகாமையாளர் எம்.தவபாலன், கோப்பாய் லயன்ஸ் கழகத் தலைவர் அ.நற்குணநாதன், கோப்பாய் வடக்கு கிராமசேவையாளர் சு.சண்முகவடிவேல் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(1-6)

## இணுவிலில் நாளை கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன. 31

இணுவில் பரராஜ சேகரப்பிள்ளையார் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்ரா மகா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளது.

காலை 7.26 மணிக்கு இராஜகோபுர கும்பாபிஷேகம் இடம் பெற்று 8.15 மணிக்கு மகாகும்பாபிஷேகம் நடைபெறும்.

மாலை 6 மணிக்கு கும்பாபிஷேக மலர்வெளியீடு இடம் பெறும்.

(203)

## வணிகர் கழகம் ஊடாக சிமெந்து விநியோகம்

யாழ்ப்பாணம், ஜன.31

யாழ்ப்பாணம் வணிகர் கழகம் ஊடாக 'யால' கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ள சிமெந்து பொதுமக்களுக்கு விநியோகிக் கப்படவிருக் கின்றது.

சிமெந்து தேவையானோர் 165, மானிப் பாய் வீதியில் அமைந்துள்ள கழகத்தின் அலுவலகத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

'சிமெந்து ஒரு பை 1600 ரூபாவாக விற்பனை செய்யப்படவிருக்கின்றது.

கிராம சேவையாளரின் சிபார்சுக் கடிதம் ஒன்றுக்கு ஆகக் கூடுதலாக 25பைக்கட் வழங்கப்படும் என்றும் பணத்தை செலுத்தி அங்கீகரிக்கப்பட்ட முகவரிடம் சிமெந்தைப் பெறலாம் என்றும் வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

(1)


### கோழிக் குஞ்சு விநியோகம்

40 நாள் வளர்ச்சியடைந்த PIRIMA சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.
BAHIRA புறொயிலர் குஞ்சுகள் 02.02.2009 விநியோகிக்கப்படும்.
பதிவுகளை மேற்கொள்ளவும்.
★ றாஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை.


## சட்டமாணி நுழைவுப் பரீட்சை

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்டு வரும் சட்டமாணி (L.L.B) கற்கைநெறிக்கான நுழைவுப்பரீட்சை இன்று சனிக்கிழமை காலை 10மணியளவில் இருந்து நண்பகல் 12மணி வரை யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (1)


கணக்கியல்துறை ஆர்வலர்களுக்காக!
முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன்!
கம்பனிக்கணக்குகளுடன், VAT இனையும் உள்ளடக்கி
நெல்லியடியிலும், யாழ்நகரிலும்.....

**Diploma in Computerized Accounting**

உங்கள் நிறுவன கணக்குகளை நீங்களே கணனிமயப்படுத்தும்படியான 100% செய்முறைப்பயிற்சியுடன்..
சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள கணக்கியல் மென்பொருட்களான
**Quick Book + ACCPAC + MYOB**
ஆகியவற்றினூடாக கற்பிக்கப்படும்

Tally

நெல்லியடியில் ஆரம்பம்:
Batch I:01/02/2009 Batch II:03/02/2009-09AM
Batch III:05/02/2009 Batch IV:07/02/2009-09AM
யாழ்நகரில் ஆரம்பம்:
Batch I:01/02/2009 Batch II:04/02/2009-
Batch III:06/02/2009 Batch IV:07/02/2009- 11AM

**COMPUTER EXPRESS**
Head Office : #167, Kasthuriyar Rd, Jaffna
Branch : #07, Kanpollai Lane, Kodikamam Rd, Nelliyadi
Phone : 0212228250 / 0777222422



**TOSHIBA** e-STUDIO

Digital Multi Functional Copier

A3 printing
A3 Scanning
A3 Copying
High durability
High Image quality
Easy operation



Special Price 145 650/=

யாழ்ப்பாணக் காட்சியறைத் திறப்புவிழாவை முன்னிட்டு
இன்று முதல் பெப்ரவரி 10 ஆம் திகதி வரை...!

Toshiba e-studio 166 Multi Functional Photo Copier
உடன் அதற்குரிய ரோணர் ஒன்று 1640k இலவசம்...!



TOSHIBA DIGITAL PHOTOCOPIER
MODEL e-STUDIO 166
- 16 CPM Copier
- 16 MB Memory
- A3 - A6 Paper size
- 25% - 200% Zoom
- One 250 sheet cassettle
- 100 Sheet bypass
- 1-999 Continuous copying
- Standard USB printing
- 600 x 2400 dpi resolution
- Standard twain scanning



Toshiba Laptops
(சர்வதேச உத்தரவாதத்துடன்)
69,500/= இருந்து

Toshiba Degital Multi Media Projectors
129, 000/=
இருந்து



North Link Engineering
Authorized dealer for
John Keells Office Automation (Pvt) Ltd.
320/1, Union Place, Colombo - 2 Sri Lanka.
Tele : +94 11 231300, +94 11 5332611, +94 11 4702611 Fax : +94 11 2431745 E-mail : jkoa@keels.com Web : www.jkoa.com

வடமாகாணத்திற்கான விநியோகஸ்தரும் விற்பனைக்கு பிந்திய சேவை வழங்குநரும்

Jaffna
North Link Engineering
#360/3, Main Street, Jaffna.
Tele : +94 21 2224098 ... E-mail : northlinkeng@yahoo.com
Vavuniya
#20, 1st Cross Street, Vavuniya.
Tele : +94 24 2224537 Fax : +94 24 2224537 E-mail : northlinkeng@yahoo.com

மேலதிக தொடர்புகளுக்கும் இலவச அறிவூட்டல்களுக்கும்
அசோக்: 0777725241
மில்றோய்: 0773182838
மயூரன்: 0777593743, 0773956612
நௌசான்: 0777770197


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# பாதுகாப்பு உறுதி அவசியம்

வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் எஞ்சியுள்ள பிரதேசங்களில் சுமார் மூன்று லட்சம் மக்கள் சிக்குண்டு, தினசரி ஷெல்,பீரங்கி, பல்குழல் ஏவுகணைகளின் தாக்குதல்களில் டசின் கணக்கில் மக்கள் கொல்லப்பட்டும், நூற்றுக் கணக்கில் மக்கள் படுகாயமடைந்தும் வரும் பேரவலம் தொடர்ந்து வருகையில் -

அந்த மக்கள் அங்கிருந்து வெளியேறுவது தொடர்பான அறிவித்தல் ஒன்றை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திடுதிப்பென விடுத்திருக்கின்றார்.

*"தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் எஞ்சியிருக்கும் பிரதேசங்களில் சிக்குண்டுள்ள மக்கள் அங்கிருந்து வெளியேறுவதற்குப் பாதுகாப்பான பாதை வசதி செய்து கொடுக்கப்படும். அவர்கள் அடுத்த 48 மணி நேரத்துக்குள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறுவதற்குப் புலிகள் அனுமதிக்க வேண்டும்."* - இவ்வாறு நேற்றுமுன்தினம் இரவு பகிரங்கமாக வெளியிட்ட விசேட அறிக்கையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார்.

இந்த அறிவிப்பில் குறிப்பிட்ட 48 மணி நேரத்தினுள் சிவிலியன்களுக்குப் 'பாதுகாப்பான போக்குவரத்து வசதி' வழங்கப்படுவதற்கான உறுதி குறித்தே இலங்கை ஜனாதிபதி பிரஸ்தாபித்துள்ளார். இந்தக் கால அவகாசத்துக்குள் 'யுத்தம் நிறுத்தப்பட்டிருக்கும்' என்றோ, 'மோதல் நிறுத்தப்பட்டிருக்கும்' என்றோ அவர் வெளிப்படையாக ஏதும் தெரிவிக்கவேயில்லை.

ஆனால், இந்த அறிவிப்பை இந்திய ஊடகங்கள் 48 மணி நேர 'யுத்த நிறுத்தம்' என்றும் 'மோதல் நிறுத்தம்' என்றும் தமக்குள் அர்த்தம் கற்பித்துக் கொண்டு செய்தி வெளியிட்டு வருகின்றன.

வன்னி மக்களின் பேரவல நிலையோடு சம்பந்தப்பட்ட முக்கிய அறிவிப்பு இது. இந்த அறிக்கையை இலங்கை ஜனாதிபதி வெளியிட்டுள்ளார் என்ற தகவல் நேற்று மாலை கொழும்பில் வெளியான கையோடே அதை முழு அளவில் வரவேற்பதாகப் புதுடில்லியில் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சிவ்சங்கர் மேனன் அறிவிப்பு விடுத்துவிட்டார்.

ஆனால் இலங்கை ஜனாதிபதியின் இத்தகைய அறிவிப்பு மூலம் பயனுள்ள விளைவு ஏதும் ஏற்பட வேண்டுமானால் முதலில் இத்தகவலை மற்றைய தரப்பான விடுதலைப் புலிகளுக்கு உரிய வழியில் தெரியப்படுத்த வேண்டும். அறிவிப்பின் சாதக, பாதக சூழல்களை சீர்தூக்கிப் பார்த்து பிரதிபலிப்பை வெளிப்படுத்தவும் அதன்படி செயற்படவும் அவர்களுக்கு உரிய கால அவகாசம் கிட்டவேண்டும்.

ஜனாதிபதியின் மேற்படி தீர்மானம் நேற்றுப் பகல் வரை புலிகளுக்கு உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டமைக்கான தகவல் ஏதும் இல்லை.

முன்னர் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான அமைதிப் பேச்சுகளில் அனுசரணைப் பணி வகித்த நோர்வேத் தரப்புக் கூட, இவ்விடயத்தில் தகவல் பரிமாற்றப் பணியில் தான் ஈடுபட்டதா என்பது குறித்துக் கருத்துக் கூற நேற்று முற்பகல் மறுத்துவிட்டது.

இலங்கை ஜனாதிபதியின் இந்தத் தீர்மானம் ஐ.நா. முகவர் அமைப்பு அல்லது செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு ஆகியவற்றின் உதவி மூலமாவது புலிகளின் தலைமைக்கு அறியப்படுத்தப்பட்டதா என்பதைத் தெரிந்துகொள்ள முடியவில்லை.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் யுத்தப் பேரவலத்துக்குள் சிக்குண்டுள்ள மக்கள் அங்கிருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வெளியேறத் தயாரா? அதற்குப் புலிகள் அனுமதிப்பார்களா? அப்படி வெளியேறுவதற்கான ஒழுங்கு முறைகளை இலகுவாக இந்தக் குறுகிய காலத்துக்குள் ஏற்படுத்தி, அதை ஒப்பேற்றி விடலாமா? - இவையெல்லாம் வேறு விடயங்கள். ஆனால் இத்தகைய அறிவிப்பை திடுதிப்பென - முன்னறிவித்தல் ஏதுமின்றி - வெளியிட்டு, 48 மணி நேரத்துக்குள் - இரண்டு நாள்களுக்குள் - அந்தக் கால அவகாசம் முடிந்துவிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ள சூழலில் - இந்தக் காலக்கெடுவுக்குள் இவ்விடயத்தை நிறைவேற்றுவது சாத்திமே இல்லை என்பது வெளிப்படை.

சிவிலியன்கள் வெளியேறுவதற்குப் பாதுகாப்பான பாதை வசதி செய்து கொடுக்கப்படும் என இலங்கை அரசு அறிவித்திருந்த போதிலும் - அதற்கான இந்தக் கால அவகாசத்துக்குள் நேற்றுப் பகலும் - அங்கு 'பாதுகாப்புப் பிரதேசம்' என்று அறிவிக்கப்பட்ட வலயங்கள் உட்பட்ட பகுதிகளிலும் ஷெல், பீரங்கி, பல்குழல் ஏவுகணைத் தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணமே இருந்தன எனக் கூறப்படுகின்றது.

ஜனாதிபதியின் அறிவிப்பில்,மேற்படி பிரதேசத்திலிருந்து வெளியேறும் மக்களுக்குப் பாதுகாப்பும், அமைதியும், சுதந்திரமும், உரிமைகளும் வழங்கப்படுவது உறுதிசெய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் -

அரசு தனது இந்த உறுதிமொழி முழு அளவில் நடைமுறைப்படுத்தப்படும் என்பதை ஐ.நா. தொண்டர் அமைப்பு, சர்வதேச சமூகம் போன்றவற்றின் உறுதிப்பாட்டுடன் முன்வைத்தால்தான் தமிழ் மக்கள் ஓரளவுக்கேனும் அதை நம்புவார்கள்.

ஏற்கனவே அண்மைக்காலத்தில் - கடந்த மூன்று ஆண்டுகளுக்குள் - புலிகளிடமிருந்து அரசுப் படைகள் கைப்பற்றிய பிரதேசங்களில் - அரசின் படை நடவடிக்கையினால் இங்கு மீட்கப்பட்டவர்கள் என்று கூறப்படும் சில ஆயிரம் தமிழர்கள், வன்னியிலும் யாழ். குடாநாட்டிலும் 'நலனோம்பு மையங்கள்' எனக் குறிப்பிடப்படும் பாடசாலைக் கட்டடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இப்படித் தடுத்து வைக்கப்பட்ட இளைஞர்களில் பலர் மர்மமான முறையில், அவ்வப்போது கடத்தப்பட்டுக் காணாமற்போயினர் என்ற தகவல்களும் வெளியாகிவருகின்றன.

இந்தச் சூழ்நிலையில் -

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து வெளியேற விரும்பும் சிவிலியன்கள் தென்னிலங்கையிலோ அல்லது வடக்கு இலங்கையிலோ தடுத்து வைக்கப்பட மாட்டார்கள், இம்சைப்படுத்தப்படமாட்டார்கள், காணாமற்போகச் செய்யப்படமாட்டார்கள் என்ற உறுதிமொழி, தென்னிலங்கை அரசால் - சர்வதேசசமூகம் பிணை நிற்க - பகிரங்கமாக வழங்கப்பட வேண்டும். அப்படி வழங்கப்படாத பொதுவான பேச்சைக் கேட்டு, புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்திலிருந்து தமிழர்கள் அரசுக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வருவார்களா என்பது கேள்விக்குறி. அப்படி வருவது துர்லபம்.

# அழிவின் விளிம்பில் நிற்கும் மக்களை காப்பாற்ற உதவுமாறு சர்வதேச பிரதிநிதிகளிடம் கேட்டு வருகிறோம்

## தொடர் உண்ணாவிரத நிகழ்வில் மாவை சேனாதிராசா

யாழ்ப்பாணம், ஜன.31

அழிவின் விளிம்பில் நிற்கும் எமது மக்களைப் காப்பாற்றக் கூடியதான



வழிகள் அனைத்திலும் முற்று முழுதான முயற்சி களில் ஈடுபட்டுள்ளோம். அவலங்களை நிறுத்தவும் போரை நிறுத்தி மக்களுக்குத் தேவையான உணவு, மருத்துவ வசதிகளை ஏற்படுத்தவும் தொடர்ந்தும் சர்வதேசப் பிரதிநிதிகளுடனும், ஐ.நா. சபையுடனும் தொடர்பு கொண்ட வண்ணம் உள்ளோம். இந்தக் கொடிய யுத்தம் நிறுத்தப்படவும், முடிவுக்குக் கொண்டு வரப்படவும் உரிய வழிமுறைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகிறோம்.

இப்படி கூறியுள்ளார் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா.

வன்னியில் தொடரும் போரை நிறுத்தவும் பொது மக்களைப் பாதுகாக்கவும் கோரி யாழ்.மரியன்னை பேராலயத்தில் இடம்பெற்று வரும் தொடர் உண்ணாவிரதத்தில் மூன்றாவது நாளான நேற்று கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எமது மண்ணில் குறிப்பாக வன்னிப் பிரதேசத்தில் உள்ள மக்கள் இன்று படும் அவலங்கள், உயிரிழப்புக்கள் தொடர்பாக சர்வதேசத்துக்கும் ஐ.நாவுக்கும் எடுத்துக் கூறிக்கொண்டு வருகின்றோம். வன்னியில் குண்டு வீச்சுக்களாலும், பல்குழல் எறிகணைத் தாக்குதல்களாலும் 500 இற்கும் அதிகமான மக்கள் அங்கு படு கொலை செய்யப்பட்டுள்ளனர். 1000 இற்கும் அதிகமான மக்கள் அரசினால் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்ட பகுதியில் காயமடைந்து சிகிச்சைக்காக வவுனியாவுக்கு எடுத்துவரப் படும்போது ஓமந்தைப் பகுதியில் இராணுவத்தினரால் தடுத்து திருப்பி விடப்பட்டுள்ளனர். ஐ.நா. பிரதி நிதிகள் மற்றும் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளைக் கூட காயமுற்ற மக்களைக் காப்பாற்ற அரசு அனுமதிக்கவில்லை. புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்கும் குண்டு வீசப்பட்டுள்ளது. புதுக் குடியிருப்பில் இருந்து தீவிர சிகிச்சைக்காக வவுனியாவுக்கு வந்த மக்களை அங்கு செல்லவிடாது ஒட்டுசுட்டானில் திருப்பி விட்டனர்.

பாதுகாப்பான இடத்திற்கு மக்களைப் போவதற்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உணவு, மருந்து வகைகளை அரசின் அனுமதியுடன் எடுத்துச் செல்லக்கூடியதான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கொழும்பில் சந்தித்த ஐ.நா.பிரதிநிதியிடம் தெரிவித்து இது தொடர்பில் மக்களைப் பாதுகாக்கக் கூடியதான முடிவு தேவை என தெரிவித்துள்ளோம். அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என ஐ.நா.பிரநிதி தெரிவித்துள்ளார்.

இங்கு நடைபெறும் இந்த உண்ணாவிரதத்தின் மூலம் மக்களுக்கு நீதியான -ஜனநாயகரீதியான ஒரு முடிவு கிடைக்க வேண்டும். அனைத்து மக்களுமே இந்தப் போரினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இன்று இறந்தும் காயமடைந்தும் சொத்துக்களை இழந்தும் அல்லலுறும் மக்களுக்காகவும் எமது விடுதலைக்காக போர் முனையில் மடிந்துபோன ஆயிரமாயிரம் இளைஞர், யுவதிகளுக்காகவும் அமைதியான வழியைக் கடைப்பிடித்து போரை முடிவுக்குக் கொண்டு வர முனைவோம்- என்றார். (50-111)

# மூன்று பிரதான பரீட்சைகளுக்குரிய திகதிகள் அரசாங்கத்தால் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 31

அரசாங்கப் பாடசாலைகளில் இந்த வருடம் நடைபெறவுள்ள மூன்று பிரதான பரீட்சைகளுக்குரிய திகதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அரச பாடசாலைகளில் பிரதி வருடமும் நடைபெறும் 5 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை, ஜி.சீ.ஈ.சாதாரண தரம் மற்றும் ஜி.சீ.ஈ.உயர் தரம் ஆகிய 3 பரீட்சைகளுக்குமே திகதிகள் குறிக்கப்பட்டுள்ளன.

இதன்படி 5 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை ஓகஸ்ட் மாதம் 16 ஆம் திகதியும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரையிலும் நடைபெறும். இதில் டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாத்திரம் பரீட்சை நடைபெறாது.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை நடைபெறும். அதில் போயா தினமான ஓகஸ்ட் 5 ஆம் திகதியும் ஞாயிற்றுக்கிழமைகளான 9, 16, மற்றும் 23 ஆகிய தினங்களிலும் பரீட்சை நடைபெற மாட்டாது என்றும் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (50)

# லண்டனில் இன்று கண்டன ஊர்வலம்

வன்னியில் நிலவும் மனிதப் பேரவலத்தைக் கண்டித்தும் சர்வதேசத்திற்கு அதனை உணர்த்தும் வகையிலும் லண்டனில் இன்று சனிக்கிழமை மாபெரும் கண்டனப்பேரணி ஒன்று நடைபெறவுள்ளது. இந்த ஊர்வலத்தில் லண்டன் வாழ் அனைத்துத் தமிழ் மக்களும் கலந்து கொண்டு பேரெழுச்சியைக் காட்ட வேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக புதன்கிழமை அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரசு நாளும் பொழுதும் வன்னியில் குறுகிய நிலப்பரப்புக்குள் வாழும் மக்கள் மீது கடுமையான வான்வெளி மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தி மக்களை வகை தொகையின்றி அழித்து வருகின்றது.

இந்த மனிதப் பேரவலமும் படுகொலை யும் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளன.

குண்டு வீச்சினால் தறிகெட்டு ஓடுபவர்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்கள் உயிருடன் இருக்கின்றனரா? அல்லது இறந்து விட்டனரா? என்ற நிலை தெரியாமல் தவித்தும் வருகின்றனர்.

மழை போல் பொழியும் குண்டு வீச்சுக்கு மத்தியில் எங்கும் மரண ஓலமே கேட்கின்றது. வீதிகள், வளவுகள் ஏன் வீடுகளுக்குள்ளும் தசைத் துண்டுகளும் பிண்டங்களுமே காணப்படுகின்றன.

இந்த தமிழின அழிப்பையும் மனித அவலத்தையும் சர்வதேச சமூகம் மௌனமாக இருந்து ஆதரித்து வருகின்றது.

புலம்பெயர்ந்து வாழும் மக்கள் அந்தந்த நாடுகளின் சட்ட திட்டங்களை மதித்து ஓரணியில் திரண்டு அரசியல் ரீதியான போராட்டங்களை முன்னெடுப்பதன் மூலம் அனைத்துலகத்திற்கு எமது ஒற்றுமையையும் பலத்தையும் காட்டி அனைத்துலகத்தின் கண்களைத் திறக்க வைக்க வேண்டும்.

இது புலம் பெயர்ந்து வாழும் ஒவ்வொரு தமிழ் மக்களினதும் இன்றைய கடமையாகும் என்பதை மறக்க வேண்டாம்.

எனவே லண்டனில் உள்ள தமிழ் அமைப்புக்கள், பாடசாலைகள், வர்த்தக நிறுவனத்தினர், பொது மக்கள் என அனைவரும் இதில் கலந்து கொள்ளவேண்டும் - என்று கூறப்பட்டுள்ளது.

# யாழ்.தொழில் நுட்பக் கல்லூரியில் அடுத்த மாதம் புதிய கற்கை நெறிகள்

யாழ்ப்பாணம்,ஜன.31

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியின் 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டி புதிய கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்லூரி அதிபர் என்.யோகராஜன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்.தொழில் நுட்பக் கல்லூரி இந்த வருட இறுதிக்குள் இரத்மலானை வாழ்க்கைத் தொழில் நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் வளாகமாக தரமுயர்த்தப்படவுள்ளது.

அத்துடன் அடுத்த மாதம் 24 ஆம் திகதி கல்லூரியின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்படவுள்ளது.

அதனையொட்டி புதிய கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. தேசிய டிப்ளோமா தர ஆங்கிலம், குடிசார் இயந்திரவியல், கனிய அளவீடு, மின்னியக்க இயந்திரப் பொறியியல் ஆகிய பயிற்சிநெறிகளும்-

ஜி.சீ.ஈ.உயர்தரத்தில் உயிரியல் பாடத்தில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்தவர்களுக்காக உயர் தேசிய தராதர சான்றிதழ் பயிற்சி நெறிகளான உயிரியல் தொழில்நுட்பவியல், நுண் உயிரியல் ஆகிய கற்கை நெறிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பயிற்சிகளை மேற்கொள்ள விரும்புகின்ற மாணவர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும்-மேலதிக விவரங்களை கல்லூரியின் விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் எனவும் அதிபர் என்.யோகராஜன் மேலும் தெரிவித்தார். (50-9)

# தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பிரகாசித்த மாணவர்களுக்குப் பரிசில்கள்

யாழ்ப்பாணம்,ஜன.31

கடந்த ஆண்டுதேசிய ரீதியில் நடைபெற்ற பாடசாலை மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்கள், மாணவிகளுக்கு ஊக்குவிப்புப் பரிசில்களை வழங்கும் நிகழ்வு கடந்த 28 ஆம் திகதி சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் யாழ். அலுவலகத்தில் நடைபெற்றது. சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதில் கலந்து கொண்டு மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார்.

இந்த நிகழ்வில் விளையாட்டுக்களில் வெற்றியீட்டிய 74 மாணவர்கள், மாணவிகள் கலந்து கொண்டனர்.

யாழ்.குடாநாட்டில் கல்வி மற்றும் விளையாட்டுத் துறைகளில் தடைகள் விரைவில் நீக்கப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்த வைபவத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

மாணவர்களுக்கான போக்குவரத்து, தங்குமிடவசதி, உணவு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தமைக்காக இந்த நிகழ்வின்போது அமைச்சருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம், கல்வி அதிகாரிகள், பாடசாலைகளின் அதிபர்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

## நாளை

| | |
|---|---|
| தை 19 | 01.02.2009 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | ஷஷ்டி |
| | பி.ப.03.39 வரை |
| நட்சத்திரம்: | ரேவதி |
| | பி.ப.02.28 வரை |
| சுபநேரம்: | 09.36 - 11.06 |
| ராகுகாலம்: | 05.06 - 06.36 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய கிழக்கு குறித்த அமெ. கொள்கையில் மாற்றம் அவசியம்; வலியுறுத்துகிறது ஈரான்

டாவோஸ், ஜன. 31

''மத்திய கிழக்குத் தொடர்பான அமெரிக்காவின் கொள்கைகளில் மாற்றம் ஏற்படவேண்டும். அப்படியானால், அதனுடன் ஒத்துழைக்க ஈரான் முன்வரும். ஒத்துழைப்புக்கு இசைவான போக்கைக் கடைப்பிடிக்கும். இப்போது நாம் ஒரு திருப்புமுனையை அடைந்துள்ளோம்.''

- இவ்வாறு ஈரானிய வெளிவிவகார அமைச்சர் மனோச்சிர் மொட்டாகி, டாவோஸில் நடைபெற்ற உலக பொருளாதார அமைப்பின் மாநாடொன்றில்பேசுகையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ''பராக் ஒபாமா அறிவித்துள்ளமை போல, அமெரிக்காவின் புதிய நிர்வாகம் அதன் கொள்கைகளை மாற்றிக்கொள்ளும் என நாம் நம்புகின்றோம்.இவ்வாக்கு பேச்சளவில் மாத்திரம் இருந்துவிடக்கூடாது. செயலுருபெற்றுவிட வேண்டும்'' என்றும் கேட்டுக் கொண்டார்.

''அமெரிக்காவின் கொள்கைகளில் நியாயபூர்வமான மாற்றங்கள் ஏற்பட வேண்டும். இம்மாற்றங்களால், மத்திய கிழக்கில், அதற்கு அனுகூலமான நிலைப்பாடு உருக்கொள்ளும். ஒத்துழைப்புக்கான அணுகுமுறையை இப்பிராந்தியமும் மேற்கொள்ளும்'' என்றும் அவர் தெரிவித்துக் கொண்டார்.

''இம்மாற்றங்களால், இப்பிராந்தியத்தில் பொதுப்படையான புரிந்துணர்வு ஏற்படும். இதிலிருந்து ஈரானும் தன்னைத் தனிமைப்படுத்திக்கொள்ளாது. நாம் இப்போது ஒரு திருப்புமுனையில் உள்ளோம். ஒரு மைல்கல்லை வந்தடைந்துள்ளோம்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படைகள் மீளப் பெறப்படும் என ஒபாமா அறிவித்துள்ளார். இதனை ஈரான் வரவேற்கிறது. அத்துடன் ஆப்கானில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படைகளையும் அவர் மீளப் பெற்றுவிடவேண்டும். இதனையும் ஒருங்கே ஈரான் எதிர்பார்க்கின்றது'' என்றும் மனோசசிர் சுட்டிக்காட்டினார்.

''முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷின் கொள்கைகளிலிருந்து தம்மை விலத்திக்கொள்வதற்கான அபார 'துணிச்சல்' பராக் ஒபாமாவிடம் உண்டு. சமத்துவ உரிமைகளுக்கான ஒரு யுகத்துக்குள் அவர் பிரவேசிக்க வேண்டும்'' என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

## இந்தியப் பிரதமருடன் பேச ஒபாமா விருப்பம்

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் குணமடைந்தவுடன் அவருடன் தாம் பேச விரும்புகிறார் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் 44 ஆவது ஜனாதிபதியாக பராக் ஒபாமா கடந்த 20 ஆம் திகதி பொறுப்பேற்றுக் கொண்டார். ஜனாதிபதியாக பொறுப்பேற்றதும் ஒபாமா இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் பேச விரும்பினார்.

எனினும், மன்மோகன் சிங் இருதய அறுவை சிகிச்சைக்கு உட்பட்டு வைத்தியசாலையில் இருந்தமையால், ஒபாமாவால் அவரோடு பேச முடியவில்லை. மன்மோகன் சிங் குணமடைந்ததும் அவருடன் பேச ஒபாமா விரும்புகிறார் என வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ரொபர்ட் கிப்ஸ் கூறியுள்ளார்.

## பாகிஸ்தானின் அணு ஆயுதங்கள் தீவிரவாதிகளிடம் சிக்கும் ஆபத்து

### அமெரிக்க செனட் ஆலோசகர் அச்சம்

வாஷிங்ரன், ஜன. 31

''பாகிஸ்தானிலுள்ள அணு ஆயுதங்கள் அங்குள்ள தீவிரவாத அமைப்புகளிடம் சிக்குவதற்கான வாய்ப்பு உண்டு. இதனை அமெரிக்க செனட் குழுவின் மூத்த ஆலோசகர் பிரைன் மைக்கேல் ஜென்கின்ஸும் சுட்டிக்காட்டியுள்ளார்.

- இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட ஜோன் மெக்கைன், தாம் அளித்துள்ள தொலைக்காட்சிப் பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

மும் பைத் தாக்குதல்கள் தொடர்பாக அமெரிக்க செனட் குழு மேற்கொண்ட விசாரணை முடிவடைந்ததையடுத்து இவர், இப்பேட்டியை அளித்துள்ளார்.

''பயங்கரவாதிகளுக்குத் துணை போகும் தாவூத் இப்ராஹிம் போன்ற குற்றவாளிகள் மூலமாக இத்தகைய அணுவாயுதங்கள் கைமாறுவதற்கான வாய்ப்பு உண்டு. அணுவாயுதத் திட்டங்கள், இரகசியங்கள் ஆகியவற்றுக்காகவே, உலகில் பாகிஸ்தானில் மட்டுமே கறுப்புச் சந்தைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இது எமக்குப் பெரிதும் கவலை அளிக்கிறது'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

''பாகிஸ்தானில் அரச அதிகாரிகளுக்கும், பயங்கரவாத அமைப்புகளுக்குமிடையே நெருங்கிய தொடர்புகள் உள்ளன என்ற தகவல்களும் பரவலாக வெளியாகியுள்ளன. இந்த அதிகாரிகளின் நடவடிக்கைகள் தொடர்பாக, கூடிய கண்காணிப்பு தேவை. இது விடயத்தில், பாகிஸ்தான் அரசு கூடிய சிரத்தைக்காட்டவேண்டும்'' என்றும் அவர் கேட்டுள்ளார்.

## அமெ. வெடிகுண்டுடன் மாணவன்; ஜப்பானில் பெரும் பரபரப்பு!

டோக்கியோ, ஜன. 31

இரண்டாம் உலகப் போரில் அமெரிக்கர்களால் வீசப்பட்டு வெடிக்காமல் கிடந்த வெடிகுண்டை கண்டெடுத்த மாணவன் ஒருவன் பள்ளிக்கூடத்துக்கு எடுத்து வந்தான். இது பரபரப்பை ஏற்படுத்தியது.

இரண்டாம் உலகப் போர் முடிந்து 60 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. ஆனாலும், அப்போது அமெரிக்க விமானப் படையால் வீசப்பட்டு வெடிக்காமல் கிடக்கும் குண்டுகள் ஜப்பானில் தற்போது கண்டெடுக்கப்படுகின்றன.

இரண்டாம் உலகப் போரின்போது ஜப்பானிலுள்ள ஓகிநாவா தீவு மீது அமெரிக்க போர் விமானங்கள் தொடர்ந்து 3 மாதங்கள் வரை குண்டு மழை பொழிந்தன. இதில் இந்த தீவில் வசித்த 1 இலட்சம் பேர் கொல்லப்பட்டனர்.

ஓகிநாவா தீவிலுள்ள பள்ளிக்கூடத்துக்கு கடந்த திங்கட்கிழமை வந்த மாணவன் ஒருவன் புத்தக பையில் குண்டு ஒன்றையும் எடுத்து வந்தான். பள்ளி அருகே விளையாடியபோது கிடைத்தது என்று கூறிய அவன், அந்த குண்டை ஆசிரியரின் மேசையில் வைத்தான். அது நிஜமான குண்டு என்பதை உணர்ந்த ஆசிரியர் அதிர்ச்சி அடைந்தார். பள்ளியில் இருந்த மாணவர்களை உடனடியாக வெளியேற்றினார்.

பொலிஸுக்கும் தகவல் கொடுக்கப்பட்டது. வெடிகுண்டு நிபுணர்கள் விரைந்து வந்து அந்த குண்டை பாதுகாப்பாக எடுத்துச்சென்றனர். அந்த குண்டு வெடித்திருந்தால், பெரும் சேதம் ஏற்பட்டிருக்கும் என இராணுவத்தினர் கூறினர்.

## ஏவுகணைத் தளத்தை நகர்த்த ரஷ்ய இராணுவம் சம்மதம்?

மாஸ்கோ, ஜன. 31

போலந்துக்கும், லித்துவேனியாவுக்கு மிடையிலான ரஷ்ய பிராந்தியமான கலினின்கிராட்டில் இனியும் ஏவுகணையை நிறுத்த வேண்டிய அவசியம் இல்லை என ரஷ்ய இராணுவ அதிகாரி ஒருவர் ரஷ்ய செய்திச் சேவைக்கு தெரிவித்துள்ளார்.

கிழக்கு ஐரோப்பாவில் தனது சொந்த ஏவுகணை எதிர்ப்புத் தொகுதியை நிறுத்துவதற்கான திட்டத்தை வேகப்படுத்துவதில்லை என அமெரிக்காவின் புதிய அரசு முடிவு செய்ததற்கு பதிலாகவே இந்த நடவடிக்கை எடுக் கப்படுகிறது என் றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்தத் தகவலை ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்தவில்லை. ஆனால், இந்த விவகாரத்துக்கு ஒரு தீர் வைக் காண முடியும் என்ற சமிஞ்ஞையை அமெரிக்காவுக்கு ரஷ்யர்கள் அனுப்ப முயல்கிறார்கள் என பிபிசி [illegible] றார்.

---


**அளவெட்டி அழகொல்லை விநாயகர் ஆலய பொதுக் கூட்டம்**

மேற்படி ஆலயபொதுக்கூட்டமும், நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் 15.02.2009 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும். உபயகாரர்கள், அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

(செ.கணேசராசா)
செயலாளர்



**காணி விற்பனை**

யாழ்.மாநகர எல்லைக்குள் யாழ். பிரதான வீதி, புதிய நீதிமன்றத்திற்கு தெற்குப் பக்கமாக 4 ப்ரப்பு கிணற்று வசதியு டன் கூடிய காணி உடன் விற்பனைக்கு.

தொடர்பு : 0779522521
சிறி : 0775924843
: 0776111419



**மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHOTHERAPHY)**
பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம்

போக்குவரத்துப் பிரச்சினை காரணமாக முன்னர் குறிப்பிட்ட திகதியில் சமுகம் கொடுக்க முடியவில்லை. மீண்டும் யாழ்.வரும் திகதி அறியத்தரப்படும்
Dr.P.ஆறுமுகம்



**யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்**
**விவசாய சான்றிதழ் பயிற்சி நெறி**

30.01.2009 இல் நடைபெற இருந்த நேர்முகப் பரீட்சை 05.02.2009 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

அதிபர்
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய
நிறுவனம்(மருதனார்மடம், சுன்னாகம்)



**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம்**

இடம்: சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபம்
காலம்: 14.02.2009 சனிக்கிழமை
நேரம்: முற்பகல் 10.00 மணி

1. மன்றின் விடயமாக பிரேரணைகள் இருப்பின் 06.02.2009ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் மன்றச் செயலாளர் அவர்களுக்கு அனுப்பி வைக்கவும்
2. 2005-2008ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வெள்ளிவிழாக் காணும் வர்த்தகர்களைக் கௌரவித்தல்.
3. அமரர் ச.நமசிவாயம் புலமைப் பரிசு நிதியம்.
4. சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற புலமைப்பரிசில் நிதியம்.
5. அமரர். கு.தவராஜ சிங்கம் விதவை நிதியம் போன்றவற்றை வழங்கல்.

மேற்படி கூட்டத்திற்கு அனைத்து வணிகர் மன்ற அங்கத் தவர்களையும் தவறாது கலந்த சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

செயலாளர்,
சாவகச்சேரி கைத்தொழில்
வணிகர் மன்றம்.


## மரண அறிவித்தல்

### அம்பலவாணர் பாலகெங்காதரன் (பாலு அண்ணா)

கொட்டாவத்தை, கல்வளை, சண்டிலிப்பாயைச் சேர்ந்த அம்பலவாணர் பாலகெங்காதரன் நேற்று (30.01.2009) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் - சுந்தரம் தம்பதியினரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற அம்பலவாணர் தம்பதியினரின் இளைய மகனும், காலஞ்சென்ற குமாரசாமி (ரீமேக்கர்) காலஞ்சென்ற சிவநேசன் (முகாமையாளர், A.K.S. நகை மாளிகை), கந்தசாமி (இளைப்பாறிய அதிபர்), வன்னிய சிங்கம் (முன்னாள் சிறாப்பர், விற்பனைத் திணைக்களம்) ஆகியோரின் மருமகனும், பிரபல தொழில் அதிபர் இராசரத்தினம் தம்பதியினரின் பெறா மகனும், பாலச்சந்திரன் (இளைப்பாறிய ஆசிரியர், ஆனைக்கோட்டையில் இயங்கும் மயிலிட்டி றோ.க.பாடசாலை), திருமதி ரேணுகா, திருமதி சாந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரரும், இலங்காதேவி, சிறீஸ்கந்தராசா (இளைப்பாறிய ஆய்வு கூட உதவியாளர், மானிப்பாய் மகளிர் கல்லூரி), ம.இளங்கோ (உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்) ஆகியோரின் மைத்துனரும், அகிலா, வாகுலேயன், சௌயினி, மகிஜினி ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், ரமணன், கௌரீசன் ஆகியோரின்அன்பு மாம னாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2009) சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சங்கம்புலவு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொட்டாவத்தை,
கல்வளை, சண்டிலிப்பாய்.

தகவல்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### ரகுநாதன் சசிகுமார்

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ரகுநாதன் சசிகுமார் 20.01.2009 செவ்வாய்கிழமை டோகாவில் அகால மரணமானார்.

அன்னார் ரகுநாதன் - அருந்தவப்புதல்வி தம்பதியினரின் மூத்த மைந்தனும் சசிகரன், சசி கலா ஆகியோரின் அன்புச் சகோதரனும் திலக்ஷனின் அன்புப் பெரியப்பாவும் வேலன், சின் னம்மா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2009) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சோனப்பூ இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

Note:- டோகாவில் இருக்கும் நண்பர்களின் பெற்றோர்களுக்கும் இத் தகவல்களை அறியத்தருகின்றோம்.

முகவரி:
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்,
கி.ரகுநாதன் (ரவி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த மதிப்பீடும் மீள் தக்கவைப்பும் கருதியே தமிழ்த்தினப் போட்டிகள் நடத்தப்படுகின்றன

## இணுவில் மத்திய கல்லூரி முத்தமிழ் விழாவில் கல்விப்பணிப்பாளர் விக்னேஸ்வரன்



யாழ்ப்பாணம், ஜன.31

சிறந்த மதிப்பீடும் மீள்தக்க வைப்பும் கருதியே கல்லூரிகளில் தமிழ்த்தினப் போட்டிகள் நடத்தப் படுகின்றன. அந்த் வகையில் சிறந்த அறுவடையாக இந்த முத்தமிழ் விழா மிளிர்கின்றது. எதிர்காலத்தில் இந்தப் பிரதேசத்திற்கும் நாம் வாழும் சூழலுக்கும் இது பெரும்பயன் அளிப் பதாகவிருக்கும்.

இவ்வாறு இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பேசுகையில் கூறினார்.

கல்லூரியின் பாரதி அரங்கில் அதிபர் அ.சதானந்தன் தலைமையில் நடைபெற்ற முத்தமிழ் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வில் அவர் உரையாற்றினார்.

கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

கலை, இலக்கியம், சித்திரம், விளையாட்டு போன்ற துறைகளில் சுய விருப்புடன் ஈடுபடும் மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளில் அதிக பெறுபேறுகளைப் பெறுவது அண்மைக்காலமாக அவதானிக்கப்பட்டு வருகின்றது. அந்தவகையில் இணுவில் மத்திய கல்லூரியின் வளர்ச்சியும் , பெறுபேறுகளும் உயர்ந்து வருவது வெளிப்படையான உண்மையாகும்.

சிறந்த மதிப்பீடும் மீள்தக்க வைப்பும் கருதியே கல்லூரிகள் தோறும் தமிழ்த்தினப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. அதன் உச்ச அறுவடையாக இந்த முத்தமிழ் விழா மிளிர் கிறது.

மாவட்ட மட்டத்தில் இந்தப் பாடசாலையின்சிந்து நடைக் கூத்து முதலிடம் பெற்ற போது முன்னணிப் பாடசாலைகள் பல புருவம் தூக்கி ஆச்சரியப்பட்டன.

இணைப் பாடவி தான துறைகளின் ஈடுபாடே கல்வியில் நாட்டத்தை அதிகரிக் கச் செய்யும். பிள் ளைகளின் விருப்பத்திற்கு ஏற்ப வழி நடத்த பாடசாலைகள் உதவி செய்ய வேண் டும். இன்றைய நிகழ்வுகளில் அதிகமான இளம் சிறுவர்கள் ஈடுபடுத்தப் பட்டுள் ளார்கள். எதிர்காலத்தில் சிறந்த அறுவடையை இந்தக் கல்லூரி எதிர்பார்க் கலாம்- என்றார்.

### கலைகள் தரும் சிறப்புகள்

நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கை வங்கியின் சுன்னாகம் மேற்றரக் கிளையின் முகாமையாளர் எஸ்.பி. அரசகுமார் தமதுரையில் கூறியதாவது:-

மழை பெய்ததும் மரங்களில் படிந்துள்ள தூசிகள் கழுவப்பட்டு இலைகள் பசுமை பெறுவதோடு நிலத்தடி புகுந்த நீர் ஊட்டச்சத்தாகி வேர்வழி புகுந்து மரத்தை மேலும் வளர்ச்சியுறச் செய்கின்றது. அது போலவே கலைகளும், அதைப் பார்த்த மாத்திரத்தே ஒரு புத்துணர்ச்சியைத் தூண்டி எழுச்சி கொள்ளச் செய்யும். அங்கு சொல்லப்படுகின்ற சேதிகள் மேலும் மேலும் மனிதர்களுக்கு அறிவூட்டி மனிதனை நல்வழிப்படுத்தும்.

இன்றைய பாரதி அரங்கு நல்ல பல செய்திகளைத் தெரியப்படுத்தியது. அதை நாங்கள் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். பிள்ளைகள் பெற்றோருக்கு நல்லதோர் வீணை. அதை நலங்கெட புழுதியிலே நாங்கள் எறியலாமோ? இதை மனதில் நிறுத்தி பிள்ளைகளைப் புனித மாக்க வேண்டியது பெற்றோரின் கடமை. அச்சமில்லை அச்சமில்லை என்ற பாரதியின் வரிகள்எமக்குநம்பிக்கையை ஊட்டுகின்றன. சினமடையாதே சிந்தனை தளராதே என்ற பாடல் வரிகள் எம்மை எச்ச ரிக்கையாக வழி நடத்துகின்றன. இவ்வாறு கலைப்படைப்புக்கள் முழுவதும் கருத்துக்கள் செறிந்து கிடக்கின்றன. அவற்றை இனங்கண்டு எங்கள் வாழ்க்கைக்குப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்றார். (ப-45)

# யாழ். மாநகர எல்லைக்குள் மிருகங்களைக் கட்டி வளர்க்க ஆணையாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன.31

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பொதுமக்களினால் வளர்க்கப்படும் மிருகங்களைக் கட்டி வளர்க்குமாறு மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஆடு, மாடு, நாய் போன்ற மிருகங்களை வளர்ப்போர் அவற்றை வீதிகளில் கண்டபடி அலைய விடுவதால் வீதிப்போக்குவரத்துக்கு இடையூறு விளைவிப்பதோடு வீதிகளை அசுத்தப்படுத்துகின்றன.

எனவே விலங்குகளை கட்டி வளர்க்குமாறும்- தவறுவோரது விலங்குகள் பிடிக்கப்பட்டால் தண்டம் அறவிடப்படும் என்று அச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9)

## இணுவில் மத்திய கல்லூரியின்

# முத்தமிழ் விழாவில் சிறப்பாக நடித்த இருபது நடிகர்களுக்குப் பரிசில்கள்

இணுவில்,ஜன.31

இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் மேடையேற்றப்பட்ட நாடகங்களில் சிறப்பாக நடித்த இருபது கலைஞர்கள் தெரிவு செய்யப் பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த விழாவில் ஔவையார் இசை நாடகம், பக்தப் பிரகலாதன் நாட்டிய நாடகம், காத்தவராயன் சிந்துநடைக் கூத்து ஆகிய நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. இதில் காத்தவராயன் சிந்து நடைக்கூத்து மாகாண மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

காத்தவராயன், ஔவையார் ஆகிய நாடகங்களை நெறியாள்கை செய்து மேடையேற்றிய நாடகக்குரிசில் க.மனோகரனுக்கு 'கூத்திசைக்கோ' என்னும் பட் டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

நிகழ்வுகளில் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட இலங்கை வங்கியின் சுன்னாகம் மேற்றரக்கிளையின் முகாமையாளர், இணுவில் லயன்ஸ் கழகத்தினர் ஆகியோர் தலா 10 சிறந்த நடிகர்களைத் தெரிவுசெய்து பரிசில் வழங்க முன்வந்தனர்.

### வங்கியின் பயிற்சி

மூன்று நாடகங்களிலும் முதன்மைப் பாத்திரமேற்று சிறப்பாக நடித்த மாணவி விஸ்வநாதன் வித்தியாதரணிக்கு கல்லூரியின் முன்னாள் அதிபர் மு.திருஞான சம்பந்தபிள்ளை வெகுமதி வழங்கிப் பாராட்டினார். அத்துடன் இம்மாணவி கலைத்துறையுடன் கல்வித்துறையிலும் சிறந்த பெறுபேறு பெற்றமையைப் பாராட்டும் முகமாக இலங்கை வங்கியின் சேவையில் இம்மாணவி இணைந்து 6 மாதகால விசேட பயிற்சியைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக முகாமையாளர் எஸ்.பி.அரசகுமார் தெரிவித்தார்.

கல்லூரியின் அதிபர் அ.சதானந்தனுக்கு பாடசாலையின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர் செ.இலகுநாதன் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார். (202-49)

# சாதாரணதர, உயர்தரப் பரீட்சைகளுக்குத் தோற்றியோருக்கு தொழில் பயிற்சிகள்

யாழ்ப்பாணம், ஜன.31

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் முறைசாரா கல்விப் பிரிவினரால் கல்விப் பொதுதராதர சாதாரண, உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு தொழில் பயிற்சிநெறிகள் வழங்கப்படவுள்ளன என வலயக்கல்விப் பணிப்பா ளர் திருமதி.அ.வேதநாயகம் தெரிவித்துள் ளார்.

கணனி, கணனிப்பொறி திருத்துதல், வெளியிணைப்பு இயந்திரம் திருத்துதல், மோட்டார் றீவைண்டிங், வீட்டு மின்னிணைப்பு, உடையமைத்தல், ஐசிங், தலையலங்காரம், துணியச்சுப்பதித்தல், அலங்காரப்பொருள் உற்பத்தி, கணனித்தட்டச்சு, ஆங்கிலம், சிங்களம், சமூக முகாமைத்துவம், கணக்காய்வு, உணவு பதனிடல், சமையற்கலை, கைத்தொலைபேசி திருத்துதல், பனையோலை உற்பத்தி, சமஸ்கிருதம், ஆகிய பயிற்சி நெறிகள் வழங்கப்படவுள்ளன.

பயிற்சிநெறியினை மேற்கொள்ள விரும்புகின்ற மாணவர்கள் சுயமாகத் தமது விண்ணப்பங்களைத் தயாரித்து எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் ''வலயக்கல்விப்பணிப்பாளர் வலயக் கல்வி அலுவலகம், செம்மணி வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்'' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (202-09)

# வன்னிமக்களின் வைத்திய தேவைகளைப் பூர்த்திசெய்ய நடவடிக்கை அவசியம்

## ஜயலத் ஜயவர்த்தனா எம்.பி.வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜன.31

வன்னிப்பகுதியில் பேரவலத்துக்குள்ளாகி அல்லல்படும் அப்பாவித் தமிழ்மக்களின் வைத்திய தேவையைப் பூர்த்தி செய்வதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜயலத் ஜயவர்த்தனா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வன்னியில் பல வைத்தியசாலைகள் யுத்தம் காரணமாக மூடப்பட்டுள்ளதுடன் சேவையில் உள்ள வைத்தியசாலைகளில் போதியளவு மருந்துப்பொருள்கள் இல்லாது பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

வன்னி மக்களுக்குத் தேவையான மருந்துப்பொருள்களை எடுத்துச் செல்லும் அம்புலன்ஸ்களுக்கு அரசதரப்பும், விடுதலைப் புலிகளும், சர்வதேச மனித உரிமை சட்டத்திற்கிணங்க எவ்வித இடையூறும் விளைவிக்க மாட்டார்கள் என கருதுகிறேன்.

வன்னிமக்களுக்குத் தேவையான தட்டுப்பாட்டிலுள்ள மருந்துப் பொருள்களை அன்பளிப்பாக வழங்க முன்வருகின்ற தனிநபரோ அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட அமைப்போ தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் 011-2507799, 011-4527 297 ஆகிய தொலை பேசி இலக்கத்தினூடாகவும் என்னுடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன கேட்டுள்ளார். (9)

## கடலுக்குள் மூழ்கும் அபாயம் உள்ள

# நயினாதீவு துறைமுகத்தை புனரமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.31

நயினாதீவு இறங்குதுறை பெரும் சேதமடைந்துள்ளது. இன்னும் சில காலங்களுக்குள் முற்றாகக் கடலுக்குள் அமிழ்ந்து வரும் அபாயம் உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு இத்துறைமுகத்தைப் புனர மைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நயினாதீவு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக சங்கத்தின் தலைவி திருமதி ம.சத்தியேஸ்வரி தகவல் தருகையில் தெரிவித்தவை வருமாறு:-

நயினாதீவு இறங்கு துறைமுகம் இன்னும் சில காலங்களில் முற்றாகக் கடலிற்குள் அமிழ்ந்து செல்லவுள்ளது. கடந்த ஆண்டு முடிவுக்குள் இத்துறைமுகம் மீளப் புனரமைக்கப்படும் என கூறிய போதிலும் இதுவரையில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இதேவேளை, நயினாதீவு மேற்குப் பிரதேசம் அண்மையில் ஏற்பட்ட சுனாமி, நிஷா தாக்கங்களினால் அழிவுண்டு வருகின்றது.

எதிர்காலத்தில் நயினாதீவு புனித பிரதேசம் கடல் அரிப்பினால் கடலில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகப் பல நிபுணர்களால் தெரியப்படுத்தப்பட்டு வருகின்றது.

எனவே கடலில் மூழ்கும் அபாயம் உள்ள நயினாதீவு புனித பிரதேசம் காக்கப்பட அணைச்சுவர் அமைக்கப்பட வேண்டும்.

அதேபோல கடலில் மூழ்கவுள்ள நயினாதீவு இறங்கு துறைமுகத்தை மீளப் புனரமைத்து இப் பிரதேசம் வளர்ச்சி அடைய அனைத்துத் தரப்பினரும் முன்வரவேண்டும் - என்றார். (202-95)

# வறிய மாணவர்களுக்கு 'லீட்ஸ்' நிறுவனம் உதவி

இணுவில், ஜன.31

வலி.தெற்கு உடுவில் பிரதேசத்திற்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட சிறுவர் கழகங்களில் உள்ள வறிய மாணவர்களுக்கு 'லீட்ஸ்' நிறுவனம் கற்றல் நடவடிக்கைக்கு தேவையான பொருள்கள் அடங்கிய பொதிகளை விநியோகித்து வருகின்றது. (202-45)



வன்னியில் நடைபெற்றுவரும் போரை நிறுத்துமாறும் அங்கு அவலப்படும் மக்களுக்கு உதவிக்கரம் நீட்டுமாறும் கோரி யாழ். மரியன்னை பேராலயத்தில் மூன்றாவது நாளாக உண்ணாவிரதப் போராட்டம் நேற்றும் [illegible]

கலந்து கொண்ட மக்கள் மற்றும் குருக்கள் ஆகியோரை [illegible] யாழ்.மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா ஆகியோரை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சுபமங்களகரமான சர்வதாரி வருடம் தை மாதம் 18ஆம் நாள் (31.01.2009) இன்று சனிக்கிழமை பிற்பகல் 12.57 முதல் 2.33 மணிவரையுள்ள இடப லக்கினமும் உத்தரட்டாதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

திரு. திருமதி பத்மராசா புவனேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் **திலீபன்** அவர்களுக்கும்



திரு.திருமதி சிவயோகம் நகுலேஸ்வரி தம்பதியரின் கனிஷ்ட புத்திரி திருநிறை செல்வி **இளமதி** அவர்களுக்கும்

திருவருளும் குருவருளும் கைகூட அன்பும் அறமும் சேர சுற்றமும் நட்பும் சூழ கன்னிகாதான மாங்கல்யதாரணம் **வண்ணை காமாட்சி அம்பாள் தேவஸ்தான மாரியம்மன் மண்டபத்தில்** (நாச்சிமார் கோயில்) நடைபெற பெரியோர்கள் நிட்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்பு உபசாரம்: நாளை(01.02.2009) ஞாயிற்றுக்கிழமை மணமகன் இல்லத்தில் பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெறும்.

தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்:

திருமதி பத்மராசா புவனேஸ்வரி,
திரு.திருமதி முரளீதரன் உஷா குடும்பம்,
பிரதான வீதி, சங்கானை.



திரு.திருமதி சிவயோகம் நகுலேஸ்வரி குடும்பம்,
34, காரைக்காட்டு வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

(இரு வீட்டார் அழைப்பு)

(82167)

## வாழ்வாதாரக் கருத்தரங்கு

ஆனைக்கோட்டை, ஜன.31

சீடா நிறுவனத்தின் நிதியுதவியுடன் கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகின்ற வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் உதவி பெறுகின்ற பயனாளிகளுக்கான செயல்முறைக் கருத்தரங்கு வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் மானிப்பாய் மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி திட்டத்தின் கீழ் ஆடு, மாடு, கோழிகள் என்பவற்றை பெற்றுக்கொண்ட பயனாளிகளுக்கே இக் கருத்தரங்கு நடத்தப்பட்டது. (202-20)

# புத்தக சாலை

## வாழ்வகம்





விழியில் ஒளியில்லார்க்கு வழிகாட்ட வந்துதித்துத் தன் வாழ்வை அர்பணித்த அமரர் செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் நினைவாக- நினைவுச் சிறப்பு மலராக வெளியிடப்பட்டுள்ளதே 'வாழ்வகம்' என்னும் இச் சஞ்சிகை.

அன்னலட்சுமி அவர்கள் ஒளியிழந்த பிள்ளைகளுக்கு ஆற்றிய சேவைகளை இம் மலர் நினைவு கூருவதோடு கைதடி நவீல்ட் பாடசாலை, ஆர்க் நிறுவனம், சிவபூமி, வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம், விழிப்புலனற்றோர் சங்கம் ஆகியவற்றின் வரலாற்றையும் கூறி நிற்கின்றது.

அன்னை அன்னலட்சுமி சின்னத்தம்பி அவர்களின் நினைவுச் சிறப்பு மலராக மட்டுமன்றி அன்னையின் அரவணைப்பில் வாழ்வகத்தில் வாழ்ந்து வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் சாதனையாளர்களின் மேன்மைகளும் இதில் பொறிக்கப்பட்டுள்ளன.

## மனித நடத்தையைப் புரிந்துகொள்ளல்

டாக்டர் வசந்தி தேவராசா ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட Understanding Human Behaviour' என்ற படைப்பின் தமிழாக்கம் இந்நூல். திரு.எட்வேட்ஸ் பீரிஸ் தமிழாக்கம் செய்துள்ளார்.




என்றென்றும் சைவப்பற்றும் தமிழ்ப் பண்பாடும் பேணி வாழ்ந்தவருமான திருமதி திலகவதி தர்மராஜா அவர்களின் மூன்றாண்டு நினைவாக அவரின் பெறாமகள் டாக்டர் வசந்தி தேவராசா ஸ்ரீஸ்கந்தராஜா (M.D. Cert. Genrontology) அவர்களால் ஆங்கிலத்தில் இந் நூல் எழுத்தப்பட்டதாக குறிப்பு தரப்பட்டுள்ளது. VI அத்தியாயங்களைக் கொண்டுள்ள இந்நூலில் திருமதி திலகவதி தர்மராசா பற்றிய குறிப்புகளும், படங்களும் பின் இணைப்பாகக் காணப்படுகின்றன.

அமரர் பேராசியர் சி.சிவஞானசுந்தரம் அவர்கள் இந் நூலுக்களித்துள்ள ஆசியுரையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்நூலானது மக்களோடு தொடர்பாடுகின்ற மருத்துவத்துறையில்உள்ளோர், சமூகவியலாளர்கள், கல்வியியலாளர்கள் மற்றும் ஏனையோருக்கு மிகவும் பயனுடைதாகும்'' என்பதாகும்.

## மாண்புமிகு நீதியரசர் விக்னேஸ்வரன் ஆற்றிய உரைகளின் தொகுப்பு




ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் அவர்கள் அவ்வப்போது நிகழ்த்தியுள்ள சட்டத்துறை சார்ந்த முக்கிய உரைகள் தொகுக்கப்பட்டு நூலாக வெளியிடப்பட்டுள்ளன.

க.மு.தர்மராசா இந்த வெளியீட்டைச் செய்துள்ளார். நூலுக்குத் தனியாகப் பெயர் எதுவும் சூட்டப்படவில்லை. முன்பக்கத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. ''நாட்டுப்பற்றும் தமிழ்ப் பற்றும் மிகுந்த ஓய்வு நிலை உச்சநீதிமன்ற நீதியரசர் மாண்புமிகு க.வி.விக்னேஸ்வரன் அவர்கள் ஆற்றிய சட்டத்துறை சார்ந்த மறக்க முடியாத சரித்திரத்தில் இடம்பிடித்த சில முக்கிய உரைகள்''

இந்நூலில், நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்கள் உச்ச நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பெற்றதையடுத்து உச்ச நீதிமன்ற முதல் அமர்வில் ஆற்றிய உரை, சட்டமும் தமிழும் என்ற தலைப்பில் அவர் ஆற்றியுள்ள உரை, பயங்கரவாதம் என்றால் என்ன என்பதாக அவர் எழுதியுள்ள கட்டுரை, வழக்குரைஞர் எஸ்.ஆர்.கனகநாயகம் நூற்றாண்டு தின வைபவத்தில் அவர் ஆற்றிய உரை, 'நாம் எங்கே செல்கின்றோம்' என்ற தலைப்பில் அவர் எழுதிய கட்டுரை ஆகியவை இடம் பெற்றுள்ளன.

அழகான கையடக்கமான நூலாகவே வெளிவந்துள்ள இந்நூலில் இடம்பெற்றுள்ள அம்சங்கள் நீதியரசர் விக்னேஸ்வரனின் ஆழமான அறிவையும், ஆளுமையையும் வெளிப்படுத்துவனவாகவுள்ளன. ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் புலமை கொண்ட இப் பெரியாரின் உள்ளக்கிடக்கையை ஓரளவு வெளிப்படுத்துவதாக இந்நூல் அமைந்துள்ளது எனலாம்.

இந்நூலின் வெளியீட்டாளர் க.மு.தர்மராசா, இல.2, ஹமர்ஸ் பிளேஸ், கொழும்பு - 06. (ப)

## 'பொயட்டிக்கல் வேள்ட்' - கவிதை நூல்




கலைமாமணி அண்ணாமலை மகாதேவன் எழுதிய ஆங்கிலக் கவிதைகள் தொகுக்கப்பட்டு பொயட்டிக்கல் வேள்ட் 'Poetical World' என்ற பெயரில் நூலாக வெளிவந்துள்ளது.

ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற கலைமாமணி அண்ணாமலை மகாதேவன் ஆங்கில மொழியில் கவிதை இயற்றும் ஆற்றல் பெற்றவுராக விளங்கியுள்ளது மட்டுமன்றி நாடகம் இயற்றுபவராகவும் - நடிகராகவும் விளங்கியதுடன் ஓவியராகவும் திகழ்ந்துள்ளார்.

'பொயட்டிக்கல் வேள்ட்' என்ற இத் தொகுதியில் அவர் எழுதிய 25 ஆங்கிலக் கதைகள் இடம்பெற்றுள்ளன. பல்வேறு தலைப்புக்களில் எழுதப்பட்டுள்ள கவிதைகள் அனைத்துமே சுவையூட்டுபவையாகவும் கருத்துச் செறிவுள்ளவையாகவும் காணப்படுகின்றன. ஆங்காங்கே எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன. இனிவரும் பதிப்புக்களில் அவை தவிர்க்கப்படும் என்று எதிர்பார்கலாம்.

இந் நூலைத் தொகுத்து வெளியிட்டிருப்பவர் அவரது புதல்வர் மகாதேவன் மதியழகன் அவர்.

# அரசாங்க அறிவித்தல்

**பிராந்தியப் பணிப்பாளர் பணிமனை**
**சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்**
**2009 ஆம் ஆண்டுக்கான பொருள்கள் சேவைகள் வழங்குநர்களையும், திருத்துநர்களையும் பதிவு செய்தல்**

யாழ். மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார சேவை நிறுவனங்களுக்கும் தேவையான பின்வரும் பொருள்கள், சேவைகளை வழங்குவதற்கும், திருத்துவதற்கும் தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் பொதுநிறுவனத்தினர் மற்றும் தனியாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பின்வரும் நிறுவனங்களும் தம்மைப் பதிவு செய்து கொள்ளலாம்.**

1. அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களும்.
2. சமுர்த்தி முகாமையாளர்கள்.
3. அரச நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனங்கள்.

**(அ) பொருள்கள்:-**

1. காகிதாதிகள் மற்றும் எழுது பொருள்கள்
2. பாவனைப்பொருள்கள்: தும்புத்தடி, ஈர்க்கில் தடி, சவர்க்காரம், தீப்பெட்டி, விம், காப்பிக், மொப்பர் முதலியன.
3. வைத்தியசாலை பாவனைக்கான துணிவகைகள் மற்றும் சீருடைத் துணிகள்.
4. மின்சார உபகரணங்கள்.
5. நீர் வழங்கு பொருள்கள்.
6. உருக்குத் தளபாடங்கள்.
7. மரத் தளபாடங்கள்.
8. கட்டடப் பொருள்கள்.
9. மோட்டார் வாகன உதிரிப் பொருள்கள் (ரயர், ரியூப் மற்றும் பற்றி உட்பட)
10. பிளாஸ்ரிக் பொருள்கள்.
11. இறப்பர் முத்திரைகள்.
12. அலுமினியப் பாத்திரங்கள்.
13. இரும்பு, பித்தளை, கன இரும்புப் பொருள்கள்.
14. கணனி இயந்திரம் அதனுடன் இணைந்த உதிரிப் பாகங்களும்.
15. நிழற்படப்பிரதி இயந்திரம், றோணியோ இயந்திரம், தட்டச்சு, தொலைக்காட்சிப் பெட்டிகளும் அவற்றுக்கான உதிரிப்பாகங்களும்.
16. தொலைத்தொடர்பு இயந்திரங்கள், புறொயெக்டர் (Projector)மற்றும் அவற்றுக்கான உதிரிப்பாகங்களும்.
17. ஆயுர் வேத மருந்துப் பொருள்கள்.

**(ஆ) சேவைகள்:-**

1. மரத்தளபாட, உருக்குத்தளபாடத் திருத்தம்.
2. மின் உபகரண மின் இயந்திரத் திருத்தம்.
3. கணனி, புறொயெக்டர் திருத்தம் மற்றும் சேர்விஸ் செய்தல்.
4. நிழற்பட பிரதி இயந்திரம், றோணியோ இயந்திரம், தட்டச்சு, தொலைக்காட்சிப் பெட்டி, தொலைத் தொடர்பு சாதனத் திருத்தம்.
5. மோட்டார் வாகனத் திருத்தம்.
6. மோட்டார் வாகனங்களுக்கான சேர்விஸ்.
7. அடையாள அட்டை கவரிடுதல்.
8. மோட்டர் மீள முறுக்குதல்.
9. அச்சு வேலைகள் மற்றும் பெயர் பலகை எழுதுதல்.
10. மின் கலங்களுக்கு மீள மின்வலுவூட்டல்.
11. ஒட்டு வேலைகள், உலோக வேலைகள்.

**பதிவு செய்தலுக்கான நிபந்தனைகள்:-**

1. மேற்படி வேலைகளுக்காகத் தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப் படிவத்தினை ரூபா 250.00 செலுத்திப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.
2. பதிவு செய்து கொள்வதற்கான இறுதித் திகதி எதிர்வரும் 20.02. 2009 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிவரை நேரடியாகவோ, தபால் மூலமாகவோ பதிவு செய்து கொள்ளலாம்.
3. ஒருவர் பல வேலைகளுக்குப் பதிவு செய்ய விரும்பின் ஒவ்வொரு வேலைகளுக்கும் தனித்தனியாக ரூபா 250.00 செலுத்துதல் வேண்டும்.
4. பதிவு செய்தவர்களிடம் கூறுவிலைகள் கட்டாயமாகக் கோரப்படும். பதிவு செய்யாதவர்களிடமும் கூறுவிலைகள் கோரப்படலாம். குறைந்த கூறுவிலைகள் சமர்ப்பித்த அல்லது கேட்கப்பட்ட பொருள்களுக்கான கூறுவிலைகள் சமர்ப்பித்த வழங்குநர்களுக்கே கொள்வனவுக்காக கட்டளைகள் அனுப்பப்படும்.
5. வழங்கப்பட்ட கூறுவிலைகள் குறைந்தது மூன்று மாத (03) காலத்துக்காவது செல்லுபடியானதாக அமைதல் வேண்டும்.
6. ஒரே வழங்குநரிடமிருந்து ஒரு மாதத்திற்குள் ரூபா 50, 000.00 அல்லது ஒரு வருடத்திற்குள் 500, 000.00 மேல் கொள்வனவு இடம்பெறின் அத்தொகையில் 5% பிடித்து வைத்தல் வரி (With Holding Tax) அறவீடு செய்யப்படும்.

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,
பிராந்தியப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனாதிபதி விருதுக்கான சமூக சேவைத் திட்டத்தின் கீழ், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிச் சாரணர்கள் உடுப்பிட்டி தெற்கு பண்டகைப் பிள்ளையார் ஆலயத்துக்குச் செல்லும் வீதியைப் புனரமைத்தனர். சாரணர்கள் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

## செயலரங்கள்

யாழ்ப்பாணம்,ஜன.31

அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலயமைப்பு (சொன்ட்) நிறுவனத்தின் ஏற்பாட்டில் 'சமூகப் பிரச்சினை' என்னும் தலைப்பிலான செயலரங்கம் இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 12.30 மணிவரை நடைபெறவுள்ளது.

யாழ்.அரசடி வீதியில் உள்ள மேற்படி நிறுவனத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ள இச் செயலரங்கத்தில் பிரதம விருந்தினராகப் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ஏ.அரியநாயகம் கலந்து கொள்வார்.

இந் நிகழ்வில் சட்டத்தரணிகள், பேராசிரியர்கள், அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், ஊடகத்துறையினர் எனப் பலர் கலந்து கொண்டு சமூகம் சார்ந்த பிரச்சினைகளை முன்வைக்க உள்ளனர் என்று நிறுவனத்தின் தலைவர் ச.செந்தூர்ராசா தெரிவித்துள்ளார். (9)

# படுகொலைகளை நிறுத்த பிரிட்டன் அவசர கோரிக்கை

லண்டன்,ஜனவரி.31

இலங்கையில் தற்போது காணப்படும் நிலைவரத்தை பெரும் மனிதாபிமான நெருக்கடியென வர்ணித்துள்ள பிரிட்டனின் வெளிவிவகாரச் செயலாளர் டேவிட் மில்லிபான்ட், அங்கு பொதுமக்கள் மீதான படுகொலைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டுமென வும் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அரசியல் தீர்வொன்றை முன்வைக்குமாறு இலங்கை அர சிற்கு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கைக்கான அனைத்து நாடாளுமன்றக் குழு மற்றும் பிரிட்டிஷ் தமிழ் போரம் ஆகிய அமைப்புகள் இணைந்து நாடாளுமன்றத்தில் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் உரையாற்றுகையில் பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சரும் பிரதி வெளிவிவகார அமைச்சரும் இலங் கையில் மோதலில் சிக்கி யுள்ள மக்களின் நிலை குறித்து பிரிட் டனின் ஆழ்ந்த கவலையை வெளியிட்டனர்.

''தமிழ் மக்களின் சகல உரிமைகளும் மதிக்கப்படவேண்டுமென நாங்கள் கோரிக்கை விடுக்கின்றோம். எமது முயற்சிகளில் நாங்கள் தீவிரமாக உள்ளோம். பத்திரிகையாளர்கள் சுதந்திரமாக மோதல் நடைபெறும் பகுதிகளுக்குச் செல் வதற்கு அனுமதிக்கப்படவேண்டும்.

எனினும், முதல் நடவடிக்கை கொலைகளை நிறுத்துவதே. கொலைகளைதடுத்து நிறுத்த பிரிட்டன் அனைத்து வழிமுறைகளையும் பயன்படுத்தும். இலங்கையில் ஒவ்வொரு பொதுமகன் கொல்லப்படுவதையும் நாங்கள் கண்டிக்கிறோம்'' என அவர்கள் இருவரும் குறிப்பிட்டனர். (அ-சி)

### வன்னியில் மனிதாபிமான நெருக்கடி

# ஐ.நாவின் கருத்துக்கு கோத்தபாய மறுப்பு

கொழும்பு,ஜன.31

வன்னியில் மனிதாபிமான நெருக்கடி காணப்படுவதாக செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை என்பன தெரிவித்திருப்பதை இலங்கை அரசு மறுத்துள்ளது.

பி.பி.சிக்கு கருத்துத் தெரிவிக்கையில் இதனைத் தெரிவித்துள்ள பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இலங்கை அரசு பொதுமக்களுக்கு எவ்வித உயிரிழப்பும் ஏற்படக்கூடாதென்ற கொள்கையைப் பின்பற்றுவதாகவும் தெரிவித்துள்ளார்.

வன்னி நிலைவரம் குறித்து ஐக்கிய நாடுகளும், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவும் விடுத்துள்ள அறிக்கைகள் தவறானவை என அவர் குறிப்பிடடுள்ளார்.

'' அவர்கள் பொய் சொல்கிறார்கள் என நான் கூறவில்லை. ஆனால் அவர்கள் மிகைப்படுத்துகிறார்கள்'' எனப் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

''மனிதாபிமான காரணங்களுக்காக யுத்தத்தை நிறுத்துவதற்கான வாய்ப்பில்லை. அவ்வாறு யுத்தநிறுத்தம் செய்தால் அது புலிகள் தம்மை மீளக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பாக அமையும்'' - என்றும் அவர் கூறினார். (அ-சி)

# ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியில் புதிய மண்டபங்கள்

நவாலி, ஜன.30

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் கடந்த வாரம் ஆரம்பக்கல்வி மண்டபங்கள் திறந்து வைக்கப் பட் டுள்ளன.

வித்தியாசாலை அதிபர் சிவகடாட்சம் தலைமையில் இடம்பெற்ற இத்திறப்பு விழா நிகழ்வில் வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம், வலிகாமம் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், வடமாகாண பொறியியலாளர் கு.சிவபாலன் ஆகியோர் கலந்து கொண்டு மண்டபங்களைத் திறந்து வைத்தனர்.

மேலும் அன்றைய தினம் இடம்பெற்ற பொங்கல் விழாவில் அங்கு வருகை தந்திருந்த வாழ்வக மாணவர்களின் கல்வி வசதிக்காக அதிபரின் தாயாரது ஞாபகார்த்தமாக ஒரு தொகைப் பணம் அன்பளிப்பு செய்யப்பட்டது. (202-100)

# பொதுமக்களின் உயிரிழப்பை இனியாவது அரசு தடுக்குமா?

### மனித உரிமை கண்காணிப்பகம் சந்தேகம்

கொழும்பு, ஜன. 31

வன்னியில் மக்கள் எதிர்நோக்கும் துன்பங்கள் அனைத்திற்கும் விடுதலைப் புலிகளைக் குற்றம் சாட்டிவிட்டு இலங்கை அரசு பொதுமக்களைப் பாதுகாக்கும் தனது பொறுப்புகளிலிருந்து விடுபடமுடியாது என நியூயோர்க்கைத் தளமாகக் கொண்ட சர்வதேச மனித உரிமைகள் கண்கணிப்பகம் குற்றம்சாட்டியுள்ளது.

எதிர்காலத்தில் பொதுமக்களுக்கு உயிரிழப்புகள் ஏற்படுவதைத் தவிர்ப்பதில் அரசு எவ்வளவு தூரம் ஆர்வம் கொண்டுள்ளது என்பதில் கடும் சந்தேகம் எழுந்துள்ளது என மனித உரிமைக் கண்காணிப்பகத்தின் ஆசியாவுக்கான இயக்குநர் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார். பொதுமக்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஐக்கிய நாடுகளும் சர்வதேசமும் இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்கவேண்டுமெனக் கேட்டுள்ள அவர் இது குறித்து மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

வன்னியில் மோதல் நடக்கும் பகுதியில் சிக்கியுள்ள ஆயிரக்கணக்கான மக்களின் நிலை மிகவும் ஆபத்தானதாக மாறி வருகின்றது.

விடுதலைப் புலிகள் தமது பகுதிகளிலிருந்து மக்கள் வெளியேறுவதைத் தடுத்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் பகுதிகளிலிருந்து வெளியேறும் மக்கள் இராணுவத் தடுப்பு முகாமில் குடும்பத்துடன் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் நடமாட்ட சுதந்திரத்தை மறுப்பதன் மூலம் அரசு அந்த மக்களை ஆபத்துக்குள்ளாக்கியுள்ளது.

பொதுமக்களுக்கு ஆபத்து ஏற்படுவதைத் தடுப்பதற்கான அவசர அத்தியாவசிய நடவடிக்கைகளை எடுக்குமாறு ஐக்கிய நாடுகளும் சம்பந்தப்பட்ட அரசுகளும் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இலங்கை இராணுவம் பாதுகாப்பு வலயங்களை உருவாக்கியுள்ளது எனத் தெரிவிக்கின்றது. எனினும், இந்த வலயத்திற்குள் ஷெல் வீச்சு இடம்பெற்றதற்கான நம்பகமான தகவல் வெளியாகியுள்ளன.

தற்போதைய மோதல்களில் பொதுமக்கள் எவரும் கொல்லப்படவில்லை என இலங்கை இராணுவம் முற்றுமுழுதாக மறுத்துள்ளமை எதிர்காலத்தில் பொதுமக்களுக்கு உயிரிழப்புகள் ஏற்படுவதைத் தவிர்ப்பதில் அது எவ்வளவு ஆர்வம் கொண்டுள்ளது என்ற கவலையை உருவாகியுள்ளது - என்றார். (சி)

# இலங்கையில் பயங்கரவாதத்தை முற்றாக ஒழிக்க அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றதாம் இந்தியா!

### முகர்ஜியின் வருகை அதற்காகவே என்கிறார் நிமால்

கொழும்பு, ஜன. 30

இலங்கையில் பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்துக்கட்ட இந்தியா விரும்புகின்றது என்றும் அதற்காக அந்நாடு மிக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது என்றும் அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா நேற்று முன்தினம் கூறினார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜின் வருகை பற்றி பலர் பலவாறு கருத்துக்களைக் கூறுகின்றனர். அவரது வருகையில் எந்தத்தீய எண்ணமும் கிடையாது.

இலங்கை - இந்திய உறவை வலுப்படுத்தல், இலங்கையில் பயங்கரவாதத்தை ஒழித்தல் போன்ற நடவடிக்கைகளுக்குப் பலம் சேர்க்கும் நடவடிக்கைகளில் ஒன்றாகவே முகர்ஜியின் விஜயம் அமைந்தது.

இந்நாடுகளிடையே உள்ள உறவை மேலும் மேலும் பலப்படுத்தும் நோக்கில் இரு நாடுகளின் தலைவர்கள் மாறி மாறி விஜயம் செய்வது சாதாரண விடயம். இதில் எந்தத்தீய திட்டமும் கிடையாது. பொதுவாக இலங்கையில் பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்படுவதை இந்தியா விரும்புகிறது. அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது. இந்தியா பயங்கரவாதத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட ஒரு நாடு. பயங்கரவாதத்தை நன்கு உணர்ந்த நாடு இந்தியாதான்.

மும்பை தாஜ்மஹால் ஹோட்டல் மீதான தாக்குதல் சம்பவத்தை அடுத்து நான் இந்தியா சென்றிருந்தேன். பயங்கரவாதத்தை ஒழிக்க இந்திய அரசியல் தலைவர்கள் எந்தளவு அர்ப்பணிப்புடன் இருக்கின்றனர் என்பது எனக்கு அப்போது நன்றாகத் தெரிந்தது. சிலர் அரசியல் இலாபம் தேடுவதற்காக முகர்ஜியின் வருகைக்கு பல்வேறுபட்ட விளக்கங்களை கொடுக்கின்றனர். அந்த விளக்கங்களில் எந்த உண்மையுமில்லை - என்றார். (சி)

# வன்னியில் மருந்துத் தட்டுப்பாடு இல்லையென மறுக்கின்றார் அமைச்சர்

கொழும்பு, ஜன. 31

வன்னியில் மருந்துப்பொருள்களுக்கு எதுவித தட்டுப்பாடும் கிடையாது என்று அரசு தெரிவித்திருக்கிறது .

வன்னி மக்களுக்குத் தேவையான மருந்துப்பொருள்கள் தேவையானளவு தொடர்ச்சியாக அனுப்பப்பட்டுக்கொண்டு வருகின்றன என்றும் அப்பொருள்கள் மக்களிடம் சென்றடைவதற்கு புலிகள் தான் தடைவிதிக்கின்றனர் என்றும் சுகாதார அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா கூறினார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

வன்னியில் மருந்துப்பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுவதை நாம் மறுக்கின்றோம்.

வன்னியில் வைத்தியசாலைகளில் இருந்து எமக்குக் கிடைக்கும் வேண்டுகோளுக்கு அமைய நாம் தொடர்ச்சியாக அங்கு மருந்துப்பொருட்களை அனுப்பி வருகிறோம். அங்கு மருந்துப்பொருள்களுக்குத் தட்டுப்பாடு அறவே கிடையாது.

எவ்வாறு அங்கு உணவுப்பொருள்கள் அனுப்பி வருகின்றோமோ அவ்வாறே மருந்துப்பொருட்களையும் அனுப்பி வருகின்றோம்.

மருந்துப்பொருள்களுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது என்பது புலிகளுடன் சேர்ந்தியங்கும் சிலர் கிளப்பிவிட்டுள்ள பொய்.

வன்னியில் மருந்துப்பொருள் களுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டால் அதற்குப் புலிகள் தான் காரணம்.

படையினர் கைப்பற்றியதுபோக மீதி இடங்களில் புலிகள் உள்ளனர். அங்கு போகும் மருந்துப்பொருள்கள் மக்களிடம் சென்றடையாதவாறு புலிகள் தடை விதித்துள்ளனர். அவர்கள் அவர்களின் தேவைகளுக்காகப் பயன்படுத்துகின்றனர். அந்த வகையில் புலிகளுக்கும் நாமேதான் மருந்து பொருள்களை வழங்குகின்றோம்.

இதுபோக நாம் வன்னிக்கு வைத்தியர்களைக்கூட அனுப்பியுள்ளோம். இன்னும் பல வைத்தியகர்கள் வன்னி சென்று அங்குள்ள மக்களுக்கு வைத்தியசேவைகளை வழங்கத் தயாராகவுள்ளனர். பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு அவர்களை அனுப்புவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த பிரஜைகளுக்கு புத்துக்கம் தரும் பராமரிப்புத் தொண்டர் பயிற்சி நெறி

மேற்கு நாடுகளில் மூத்த பிரஜைகள் பராமரிப்பு தொடர்பாக முன்னேற்றகரமான நடைமுறைகள் உள்ளன. அங்கு எம்மவர்கள் சிலர் இத்துறையில் கவர்ச்சிகரமான சம்பளத்துடன் வேலை வாய்ப்புக்களையும் பெற்றுள்ளனர்.

மூத்த பிரஜைகள் பராமரிப்பு என்பது அங்கு தொழில்சார்(Professional) துறை யாக வளர்ந்துள்ளது.

அதனை ஒத்த ஒரு புதிய அத்தியாயத்திற்கான கட்டியம் கூறும் நிகழ்வொன்றுக்கான ஆரம்பம் அண்மையில் சுண்டுக்குளி பிளச்சஸ் ஒழுங்கையில் நிகழ்ந்துள்ளது.

வடமாகாண சமூக நலத்துறைத் திணைக்களப் பணிப்பாளர் ஜே.எஸ்.அருள்ராஜ், பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம் ஆகியோரின் அயராத முயற்சியின் பலனாக இது நிகழ்ந்துள்ளது.

நிக்கொட்(NECORD)அமைப்பு மூத்த பிரஜைகள் சேவைத் தொண்டர் பயிற்சி நெறிக்கு முழு நிதியளிப்பையும் செய்துள்ளது.



செயலமர்வில் கலந்துகொண்ட தொண்டர்கள்

யாழ்.மாவட்ட சமூக நலத்துறைத் திணைக்களத்தின் திட்ட இணைப்பாளர் த.கிருபாகரனின் பொறுப்பில் இப்பயிற்சி நெறி சுண்டுக்குளியில் நடைபெற்று வருகிறது.

அங்கு நாம் சென்று திட்ட இணைப்பாளர் த.கிருபாகரனிடம் இப் பயிற்சிநெறி அதன் எய்தப் பெறவுள்ள நோக்கங்கள் பற்றிக் கேட்டபோது அவர் கூறியவை வருமாறு:-

''முதியோர், வயோதிபர் என்னும் சொற்கள் பழமையானவை என்பதால் மூத்த பிரஜைகள்(Senior Citizens) எனும் நவீன கலைச்சொல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

எதிர்காலச் சமூகம் நலமாக இருக்கத் தமது நிகழ்காலத்தை அர்ப்பணித்த இவர்களை நலமாகப் பார்ப்பது எமது கடனல்லவா.

இலங்கையில் 2025 ஆம் ஆண்டில் மொத்தச் சனத்தொகையில் 25 வீதமானோர் மூத்த பிரஜைகளாக இருப்பர் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

எமது யாழ்.மாவட்டத்திலும் இவர்களின் தொகை அதிகரித்த வண்ணமே உள்ளது. இங்கு இவர்கள் தொடர்பில் தனித்துவமான சில பிரச்சினைகள் உள்ளது.

முதியோர் இல்லம் என்பது இவர்களைப் பராமரிப்பதற்கான சிறந்த தீர்வாகாது.

மூத்த பிரஜைகளை சமூகத்தில் வைத்தே பராமரிக்கப்பட வேண்டும் என்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

இதன் மூலம் வசதியான முதியோர்களை வீட்டில் வைத்து பராமரிக்கும் சேவையையும் வைத்தியசாலைகளில் பராமரிப்பு சேவை தேவைப்படுவோருக்கு சேவை வழங்குவதையும் இத் தொண்டர்கள் இலக்காகக் கொண்டு உள்ளனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்து பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்தோரும் வரக்கூடிய வகையில் 25 தொண்டர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இது வருமானம் தரும் தொழிலாக மாற்றப்பட உள்ளது. இதற்கான செயற்பாட்டு அமுலாக்கத்தை யாழ். மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவை செய்யவுள்ளது.

இத் திட்டத்தின் நிறைவேற்று வேலைகளை யாழ்.மாவட்ட சமூக நலத்துறைத் திணைக்களம் செய்கிறது.

இது தொடர்பாக மேலதிக விவரம் தேவைப்படுவோர் யாழ்.செயலகத்துக்கு அருகிலுள்ள காட்டுக் கந்தோர் ஒழுங்கையில் அமைந்திருக்கும் மாவட்ட சமூக நலத்துறைத் திணைக்களத்துடன் (தொலைபேசி 060 221 1256) தொடர்பு கொள்ளலாம். அல்லது காங்கேசன்துறை வீதி, கொக்குவிலில் உள்ள யாழ்.மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவையுடனும் தொடர்பு கொள்ளலாம்.

யாழ்.மாவட்ட சுகாதாரத் திணைக்களத்தின் ஒத்துழைப்பும் பெறப்படவுள்ளது. தொண்டர்களின் சேவை மேம்பாட்டுக்காக மூன்று மாதத்திற்கு ஒருமுறை கைதடி முதியோர் இல்லத்தில் சேவை மீளாய்வு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வழிப்படுத்தப்படவுள்ளது.

இத்தொண்டர்களுக்கான செயலமர்வில் மூத்த பிரஜைகளுக்கு இலங்கையில் வழங்கப்படும் சேவைகள், பெண் முதியோரின் பிரச்சினைகளுக்கான தீர்வுகள், மன ரீதியாகப் பாதிப்புற்ற மூத்த பிரஜைகளின் பிரச்சினைகளுக்கான தீர்வுகள், ஆத்மீக ரீதியான சிகிச்சை முறைகள், உணவு முறைகள், சுகமாக முதுமையடைதல், உடற்பயிற்சிகள், சுகாதார மேம்பாட்டுப் பழக்கவழக்கங்கள், சமூகத்திற்கு அவர்களைப் பயன்பாடாக்குதல் போன்றவற்றுடன் இன்னும் பல விடயங்களும் புகட்டப்பட்டு வருகின்றன. செயன்முறைப் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

இதனால் வினைத்திறன் மிக்க மூத்த பிரஜைகள் சேவை தொண்டர்கள் உருவாக்கப்படுகின்றனர். தொடர் விளைவாக விழிப்புணர்வுச் செயற்பாடுகள் அமைந்துள்ளமையால் தொண்டர்கள் வழிகாட்டுதல் சேவையையும் செய்யும் ஆற்றல் பெற்று வருகின்றனர்.

எதிர்காலத்தில் மேலும் இரு தொகுதி பயிலுநர்களுக்கான செயலமர்வு முன்னெடுக்கும் உத்தேசமும் உள்ளது. இதன் மூலம் யாழ்.மாவட்ட மூத்த பிரஜைகளுக்குத் தேவையான பராமரிப்பு வசதிகளை ஏற்படுத்தலாம்.

கூட்டுக் குடு ம்ப முறை பெருமளவில் வலுவிழந்து தனிக்குடும்ப முறை வலுவாகும் எமது சமூகக் கட்டமைப்பில் இத்தகைய ஏற்பாடுகளின் தேவை முதலிடத்தை ஏற்படுத்தியுள்ளது - என்றார்.

சிறுவர்கள் தொடர்பான உயரிய நலன்கள் கவனிக்கவெனஅரச, அரசசார் பற்றதுறை களில் பல வித வளங்கள் உள்ள இன்றைய சூழலில் மூத்த பிரஜைகள் தொடர்பான இவ்வித முன்னோடி முயற்சிகள் வரவேற்கப்பட வேண்டியதே.



பயிற்சி நெறியின் இணைப்பாளர்: த.கிருபாகரன்

இச்செயலமர்வில் கலந்துகொண்டுள்ள தொண்டரான கோப்பாய் மத்தியைச் சேர்ந்த திருமதி கி.இந்திரகுமாரியிடம் இதில் பங்குபற்றுவதன் நோக்கம் பற்றிக் கேட்டபோது அவர் தெரிவித்தவை வருமாறு:

மூத்த பிரஜைகளுக்குத் தொண்டாற்றும் என் ஆர்வத்துக்கு உறுதுணை செய்வதாக இச்செயலமர்வில் தெரிவுசெய்யப்பட்டமை மகிழ்ச்சியளிக்கிறது.

நிபுணத்துவம் மிக்க மருத்துவர்கள், இயன்மருத்துவர்கள், பொதுச்சுகாதார பரிசோதகர்கள், சமூகசேவை அதிகாரிகள், உளவள துணையாளர், திட்டமிடல் பணிப்பாளர் போன்றோரின் அனுபவப் பட்டறிவுகளை விரிவுரைகளாகச் செய்முறைப் பயிற்சிகளாகக் கிடைக்கும்போது பெற்றுள்ளோம் - என்று கூறினார்.

மாறிவரும் வாழ்க்கைக் கோலத்திற்கேற்ப தேவைகளை நிறைவுசெய்யும் இது போன்ற புதிய திட்டங்கள் காலத்தின் தேவையுமாகும்.

வடமாகாண சமூக நலத்துறைத் திணைக்களத்திற்கு மூன்றாவது முறையாகவும் பயிற்சிநெறி ஒன்றுக்கு வடக்கு - கிழக்குச் சமுதாய மீள்கட்டுமானத்திட்டம்கைகொடுத்து வருவதைப் பாராட்டத்தான் வேண்டும்.

இத்தொண்டர்களின் ஆற்றலை சமூக அபிவிருத்திக்கு நடைமுறைச் சாத்தியமாக்குவதில் நாம் யாவரும் கைகொடுக்க வேண்டும். அப்போது தான் பெறப்படும் அறிவு சமூகத்திற்கு நேரடிப் பயன்பாட்டைக் கொடுக்கும்.

மருதன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



மாவிட்டபுரம் வீணியவரை அம்மன் ஆலயத்தில் 18 வருடங்களின் பின் கடந்த 10 ஆம் திகதி தேர்த்திருவிழா நடைபெற்றது. அம்மன் தேரில் வீதியுலா வரும்போது எடுக்கப்பட்ட படம்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தொழிலாளர் கல்வி அலகின் தொழிலாளர் கல்விச் சான்றிதழ் தொழிலாளர் கல்வி டிப்ளோமா ஆகிய கற்கைநெறிகளைப் பூர்த்திசெய்தோருக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட புதிய விரிவுரை மண்டபத்தில் நடைபெற்றது. யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் சான்றிதழ்களை வழங்கிக் கௌரவப்படுத்தினார்.






அண்மையில் நடைபெற்ற சில்லாலை சென் ஜேம்ஸ்.சனசமூக நிலைய கட்டிட திறப்பு விழாவில் கலந்து சிறப்பித்த அருட் தந்தை யூட் நிக்சன் அடிகளார் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வலி.தென் மேற்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் மற்றும் விழாவில் கலந்து சிறப்பித்த விருந்தினர்களுடன் சனசமூக நிர்வாக அங்கத்தவர்கள் இருப்பதைக் காணலாம். (130)



ஏழாலை வடக்கு அ.மி.த.க. பாடசாலையின் 120 ஆவது ஆண்டு விழாவும் சிறப்பு மலர் வெளியீடும் அண்மையில் நடைபெற்றன.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்ப்பாண பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ கற்கைகள் பீடாதிபதி க.தேவராஜா மல்லாகம் பங்குத்தந்தை ஹான்ஸ் போவரிடம் முதல் பிரதியைக் கையளிக்கிறார்.




செஞ்சிலுவைச் சங்க வலி.கிழக்கு கோப்பாய் பிரிவினரால் பொதுக்கிணறுகளைச் சுத்திகரிக்கும் பணி அண்மையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கமைவாக அச்செழு கொலனி 20 வீட்டுத் திட்டத்தில் உள்ள கிணறு அண்மையில் இறைத்து சுத்தம் செய்யப்பட்டது. இந் நிகழ்வில் பிரிவின் தலைவர் திரு.இ.மயில்வாகனம், பிரிவு ஆளுநர் சபை உறுப்பினர் மு.பரமசிங்காரம் பிரிவுத் தொண்டர் ஜே.தவநேசகுமார் ஆகியோர் கலந்து கொண்டிருப்பதையும் துப்பரவு பணி நடைபெறுவதையும் படத்தில் காணலாம். (படம்: கலைஞன்)



கடந்த வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கடந்த 24 ஆம் திகதி யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் பாராட்டிக் கௌரவித்துள்ளது.

கௌரவிப்பு பெற்ற மாணவர்களும் சங்கத்தின் அங்கத்தவர்களும் படத்தில் உள்ளனர்.



அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் கோவிலில் மேலைப்புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தின் அறநெறிப் பாடசாலையின் நெறிப்படுத்தலில் திருவாசகமணி மு.மருதபிரான் தலைமையிலான ஓதுவார் குழு திருவாசக முற்றோதுதலை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். (படம்: கர்ணா)



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் சித்தங்கேணி சிவன் ஆலயத்தில் நடாத்திய தைப்பொங்கல் விழாவில் எடுக்கப்பட்ட படம்.

அற்நெறிப் பாடசாலை மாணவர்களின் வேப்பிலை நடனத்தினை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரத்தை பலப்படுத்த அரசு 1,600 கோடி ரூபா ஒதுக்கீடு

கொழும்பு, ஜன. 31

இலங்கையின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தும் நோக்கில் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கு ஆயிரத்து 600 கோடி ரூபாவை ஒதுக்க அமைச்சரவை முடிவெடுத்துள்ளது.

இதற்கான குறைநிரப்பு பிரேரணை விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா நேற்றுமுன்தினம் கூறினார்.

அதன்படி இந்த ஒதுக்கீட்டில் இருந்து தேயிலை உற்பத்தித் துறைக்கு 150 கோடி ரூபா ஒதுக்கப்படவுள்ளது. தேயிலை ஒரு கிலோவின் விலையை 300 ரூபாவாக வைத்துக்கொள்வது இந்த ஒதுக்கீட்டின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு மூலதனத்தைப் பெற்றுக்கொடுப்பதற்காக 10 கோடி ரூபா ஒதுக்கப்படவுள்ளது.

தேயிலைக்கான கலப்பு உரம் 50 கிலோகிராமை ஆயிரம் ரூபாவுக்கு வழங்குவதற்காக 250 கோடி ரூபா ஒதுக்கப்படவுள்ளது.

பஸ் மற்றும் ட்ரக் வண்டிகளுக்கான டயர்களை இலங்கையில் உற்பத்தி செய்வதை ஊக்குவிப்பதற்காக 20 கோடி ரூபா ஒதுக்கப்படவுள்ளது.

இறப்பருக்கான உறுதியான விலையைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் இறப்பர் உற்பத்தியாளர்களுக்கு 45 கோடி ரூபா வழங்கப்படும்.

கறுவாவின் உறுதியான விலையைப் பெற்றுக்கொடுப்பதற்காக கறுவா உற்பத்தியாளர்களுக்கு 5 கோடி ரூபா வழங்கப்படும்.

ஏற்றுமதியாளர்களுக்கு 5 வீத ஊக்குவிப்பை வாங்குவதற்காக 800 கோடி ரூபா ஒதுக்கப்படவுள்ளது.

உல்லாசப் பிரயாண ஹோட்டல்களுக்கு வழங்கப்படும் வட்டி மானியம் மற்றும் கடன் போன்றவற்றை மறுசீரமைப்பதற்காக 300 கோடி ரூபா ஒதுக்கப்படவுள்ளது. (உ)

## மெய்வன்மைப் போட்டிகள்

சித்தங்கேணி, ஜன.31

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை கல்லூரி அதிபர் பு.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் வலிகாம வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் மு.நடராஜா பிரதம விருந்தினராகவும், அளவெட்டி அருணாசல வித்தியாசாலை அதிபர் கு.ஜெகநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார். (202-112)

* * *

தென் புலோலி புற்றளை மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி வித்தியாலய அதிபர் மு.அனந்தீஸ்வரன் தலைமையில் இன்று சனிக்கிழமை வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கமலாம்பாள் பஞ்சலிங்கம் கலந்து கொள்வார். (202-218)

ஆனைக்கோட்டை, ஜன.31

சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தின் மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் த.தர்மசோதி தலைமையில் நடைபெறும் இந்தப் போட்டியில் பிரதம விருந்தினராக வலிகாம கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.நாகராசாவும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய சேவைக்கால ஆலோசகர் திருமதி பி.அம்பிகைபாலனும் கலந்து கொள்வர்.

* * *

மானிப்பாய் மகளிர் கல்லூரியின் மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி எஸ்.ஜெயவீரசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வணிக பீடாதிபதி கே.தேவராஜா கலந்து கொள்வார். (202-20)

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், ஜன.31

வட்டுக்கோட்டை ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்துக்குப் புதிய பரிபாலன சபையும் தொண்டர் சபையும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

பரிபாலன சபையின் தலைவராகக் கலக் விசுவநாதனும் செயலாளராக அ.சபேசனும் பொருளாளராக சி.ஸ்ரீஜீவாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தொண்டர் சபையின் தலைவராக சி.கௌரீதரனும் செயலாளராக சி.றிசிகேசனும் பொருளாளராக அ.ரமேசனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

* * *

யாழ்ப்பாணம், ஜன.31

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஊழியர் நலன்புரிச் சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர் சி.வைரவநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி க.தயாளன் சங்கத்தின் போசகராகவும் வைத்திய கலாநிதி இ.பரமேஸ்வரன் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

செயலாளராக சி.வைரவநாதனும் பொருளாளராக க.ஜெகதீசனும் நிர்வாக சபை உறுப்பினர்களாகப் பத்துப் பேரும் தெரிவு செய்யப்பட்டனர். (202-207)

* * *

மண்டுவில், ஜன.31

சாவகச்சேரி வடக்கு மண்டுவில் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது.

புதிய தலைவராக வே.பூபாலசிங்கமும் உப தலைவராக ச.சாந்தகுமாரும் செயலாளராக க.விஜயவாசனும் பொருளாளராக வா.வீரவாகுவும் தெரிவு செய்யப்பட்டனர். (202-59)

யாழ்ப்பாணம், ஜன.31

இலங்கை மின்சாரசபை வடமாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கத்தின் புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

போசகராக வடமாகாண பிரதிப் பொது முகாமையாளர் இ.முத்துரட்ணானந்தனும் தலைவராக சி.குமாரலிங்கமும் செயலாளராக ஆ.தங்கராஜாவும் பொருளாளராக வி.நெ.ஜோன்பில்லரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

* * *

யாழ்ப்பாணம், ஜன.31

தென்மராட்சி பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் கடந்த வாரம் அங்குரார்ப்பணம் செய்யப் பட்டது.

பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர் செ.உமாபாலன் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

சமாசத்தின் புதிய தலைவராக அருணாசலம் திருநாவுக்கரசுவும் (கொடிகாமம் கி.அ.ச), செயலாளராக இளையவன் கந்தசாமியும் (கைதடி கிழக்கு இ.அ.ச.), பொருளாளராக கீர்த்திநாதன் மகேஸ்வரி அம்மாவும் (சாவகச்சேரி நகர் மகளிர் சி.அ.ச.) தெரிவு செய்யப்பட்டனர். (202-207)

## நியமனங்கள்

மந்திகை, ஜன.31

யாழ்.மாவட்டத்திற்கு முதன் முதலாக மாவட்டக் கலாசார உத்தியோத்தரொருவர் வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டு, விளையாட்டுத்துறை அமைச்சுச் செயலாளரால் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

யாழ். மாவட்ட கலாசார நடவடிக்கைகளை மேம்படுத்தும் முகமாகவே இம் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருத்;தித்துறைப் பிரதேச கலாசார உத்தியோகத்;தராகப் பணியாற்றும் திருமதி சுகுணலினி விஜயரட்ணமே யாழ். மாவட்ட கலாசார உத்தியோகத்தராக (தற்காலிகம்) நியமிக்கப்பட்டுள்ளார். (202-218)

* * *

கோப்பாய், ஜன.31

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் பணிபுரிந்து வந்த செ.ஜெயச்சந்திரன் முகாமைத்துவ உதவியாளராகப் பதவி உயர்வு பெற்று வலி.கிழக்குப் பிரதேச சபையின் உரும்பிராய் உப அலுவலகத்திற்குப் பணி மாற்றலாகி வந்துள்ளார். (202-72)

# செய்திச்சரம்... செய்திச்சரம்...

## விசேட தேவையுடையோருக்கு பல்வேறு உதவிகள்

யாழ்ப்பாணம், ஜன.31

தென்மராட்சிப் பிரதேச விசேட தேவையுடையோருக்கு சக்கர நாற்காலி, முச்சக்கர வண்டி ஆகியவை சமூக சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்படவுள்ளன.

சக்கர நாற்காலி மற்றும் முச்சக்கர வண்டி தேவைப்படுவோர் உரிய மருத்துவரின் சான்றிதழுடன் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுக்கு விண்ணப்பிக்குமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

இதேவேளை - பாவனையில் உள்ள முச் சக்கரவண்டி, சக்கர நாற்காலி திருத்த வேண்டியிருப்பினும் தொடர்பு கொள்ளுமாறும் அறிவித்துள்ளார். (202-207)

## சனத்தொகைக் கணிப்பீடு

யாழ்ப்பாணம், ஜன.31

யாழ்.மாநகரசபை சுகாதாரப் பிரிவினரால் வருடா வருடம் மேற்கொள்ளப்படும் நகர சனத்தொகைக் கணிப்பீடு நடாத்தப்பட்டு வருகிறது.

இவ்வாரம் ஜே/71,ஜே/72 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் இம் மதிப்பீட்டை சுகாதார சேவை தாதியர்கள் மேற்கொண்டுள்ளனர். (202-160)

## வீதி திருத்தக் கோரிக்கை

கோப்பாய், ஜன.31

கோப்பாய் வடக்கு கிருஷ்ணன் கோயில் வீதியை செப்பனிட்டு உதவுமாறு அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். சுமார் 2 கிலோ மீற்றர் நீளமான இவ்வீதியின் இரு மருங்கிலும் விவசாயச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனால் விவசாய நடவடிக்கைகளுக்கு இவ்வீதியைப் பயன்டுத்தும் எல்லாச் சந்தர்பங்களிலும் பல்வேறு இடையூறுகளை எதிர்நோக்குவதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (202-72)

## தகுதிகாண் பரீட்சைகள்

கோப்பாய், ஜன.31

அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான தகுதிகாண் பரீட்சைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடை பெறவுள்ளது.

காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 11 மணி வரை இந்து சமயப் பாடமும், 11.30 முதல் 1.30 வரை தமிழ்ப்பாடமும் நடைபெறவுள்ளன.

பரீட்சைக்குத் தோற்றுகின்ற ஆசிரியர்கள் தேசிய அடையாள அட்டையுடன் சமூகமளிக்க வேண்டும் என்று இந்து கலாசார திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி குமரன் ஹேமலோஜினி கேட்டுள்ளார். (9)

## தென்மராட்சி முதியோரின் அடையாள அட்டைகள்

யாழ்ப்பாணம், ஜன.31

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் இவ்வருட ஜனவரி மாதத்தில் முதியோர் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களின் அடையாள அட்டைகள் வந்துள்ளன.

பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் அவற்றினைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் கேட்டுள்ளார். (202-59)

## கசிப்பு விற்றவருக்கு 4 இலட்சம் ரூபா அபராதம்

மந்திகை, ஜன.31

கசிப்பு விற்பனையிலீடுபட்டு மதுவரிப் பரிசோதகர்களிடம் அகப்பட்டுக் கொண்ட ஒருவருக்கு 4 இலட்சம் ரூபா அபராதமும், அபராதத்தைச் செலுத்தத் தவறின் நான்கரை வருட கடூழியச் சிறைத் தண்டனையும் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை மதுவரிப்பரிசோதகர்களின் திடீர் பரிசோதனைக் குழுவிடம் கசிப்பு விற்பனையிலீடுபட்ட அல்வாயைச் சேர்ந்த தியாகராஜா ஜெயக்கொடி என்பவர் அகப்பட்டுக் கொண்டார்.

மதுவரிப் பரிசோதகர்கள் இவரைப் பருத்தித்துறை நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி கே.அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

சம்மந்தப்பட்ட நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டது. (202-218)

## கோப்பாய், நீர்வேலியில் வாழைச்செய்கை ஆரம்பம்

கோப்பாய், ஜன.31

கோப்பாய், நீர்வேலி பிரதேச விவசாயிகள் வாழைச்செய்கையை படிப்படியாக மீள ஆரம்பித்து வருகின்றனர்.

பல்வேறு சிரமங்களின் மத்தியிலேயே இச்செய்கையை ஆரம்பிப்பதாகவும் வெள்ள அனர்த்தத்தால் ஏற்பட்ட பாரிய அழிவிற்கு இது வரை எந்தவொரு இழப்பீட்டுக் கொடுப்பனவையும் பெறாத நிலையில் பயிர்ச்செய்கையை ஆரம்பிக்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (202-72)

## உசன் கிராம மக்கள் இடம்பெயர்ந்தோருக்கு உதவி

யாழ்ப்பாணம், ஜன.31

மிருசுவில் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு விநியோகிக்கவென உசன் கிராம மக்கள் ஒரு தொகுதி பாத்திரங்களையும் சோப் மற்றும் பிஸ்கட் வகைகளையும் வழங்கியுள்ளனர்.

இப் பொருள்களை பிரிவு கிராம அலுவலர் திருமதி சு.செல்வவிநாயகம் தலைமையிலான குழு பிரதேச செயலரிடம் கையளித்தது.

இம்மக்கள், நல்ன்புரி நிலையத் தில் தங்கியுள்ள மக்களுக்கு அண்மையில் சமைத்த உணவு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (202-207)

## போதனா வைத்தியசாலையில் மருந்துகள் தட்டுப்பாடு

நவாலி, ஜன.31

யாழ்.போதனா வைத்தியசாலையில் முக்கியமான சில மருந்து வகைகளுக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக கிளினிக் நோயாளர்களை வெளியில் பெற்றுக்கொள்ளுமாறு கூறப்படுவதனால் அவர்கள் மிக அதிக விலை கொடுத்தே வாங்க வேண்டியுள்ளதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

இவற்றில் முக்கியமாக இருதய நோயாளிகள் பாவிக்கும் வோபரின் (Wafarin) என்ற குளிகை வெளியிலும் இல்லாதபடியினால் பெரும் கஷ்டத்தை எதிர் நோக்குகின்றனர்.

சம்பந்தப்பட்டவர்கள் தட்டுப்பாடான மருந்துகளை உடன் தருவித்து நோயாளிகளுக்கு உதவ நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளது. (202-100)

## ஆசிரிய வழிகாட்டிகள்

யாழ்ப்பாணம், ஜன.31

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 8இல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்குரிய ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டிகளை பெற்றுக் கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (9)

## கோவா, பீற்றூட் செய்கை

கோப்பாய், ஜன.31

கோப்பாய், நீர்வேலிப் பிரதேச விவசாயிகள் பலர் கோவா மற்றும் பீற்றூட் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த காலங்களோடு ஒப்பிடுகையில் இவ்வருடம் கூடுதலான நிலப் பரப்பில் இச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (202-72)

## மண்எண்ணெய் முத்திரை வலி. கிழக்கில் விநியோகம்

கோப்பாய், ஜன.31


வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் மின்இணைப்பு வசதி இல்லாத, சமுர்த்தி முத்திரை பெறுகின்ற பயனாளிகளுக்கு மண்எண்ணெய் முத்திரை கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. (202-72)

## சமுர்த்தி நிவாரணம் விநியோகம்

கோப்பாய், ஜன.31

இரு வாரங்களுக்குரிய சமுர்த்தி நிவாரண உணவுப் பொருள்கள் வலி.கிழக்கு நீர்வேலி ப.நோ.கூ.சங்கத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் விநியோகம் நடைபெற்று வருகிறது. (202-72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாருமே காணாத ஒரு துளி கண்ணீர்

கோகுலராகவன்

பள்ளிக்கு மட்டம் போடுதலில் மாண வர்களுக்கு ஓர் அலாதிப்பிரியம். அது எல் லாவகை மாணவர்களுக்கும்தான். நாங்கள் பண்ணியதும் அதுதானே. சில மாணவர் ஒரு நாள், இருநாள் என்று வராமல் விடுவார் கள். காரணத்தைக் கேட்டும், கடிதம் வாங்கியும் கொஞ்சம் அச்சுறுத்தல் பண்ணி விடுவது வழக்கம்.

எனது புதிய வகுப்பில் ஒரு மாணவன் ரொம்பவும் பிகு பண்ணினான். வாரத்தில் மூன்று நாள்கள் ஆகக்குறைந்தது அவன் பள்ளி வருவதில்லை. பன்னீர்ச்செல்வன் அவனது பெயர். மிகவும் சோர்வான பாங்கு. எண்ணையில்லாத தலை. மஞ்சளாகிப் போன வெள்ளைச்சேட்.

''எங்கையப்பு சீருடை?''

''தைக்க குடுத்திருக்கு சேர்''

முகம் பார்த்துக் கதைக்க மாட்டான். குனிந்த தலை. ஒருகணம் நிமிர்ந்து பார்ப் பான். மறுகணம் குனிந்து விடுவான். எனது புரிதல் எல்லையை மறுதலித்த ஆளுமை.

ஒருவாரம் அவன் மூன்று நாள்கள் - வழமைபோல் - அவன் பள்ளிக்கு வரவில்லை. நாலாம் நாள் வந்திருந்தான். வகுப்பு மூலையில் அமர்ந்திருந்தான். கூப்பிட்டேன்.

''ஏன் மூன்று நாள்கள் பள்ளிக்கூடம் வரேலை?''

''காய்ச்சல் சேர்''

''கடிதம் இருக்கா?''

தலையை ஆட்டினான்.

''மருந்து எடுத்தனியா?''

''ஓம்'' - தப்பிக்கப் பொய் சொல்லுகிறான்.

''ஆஸ்பத்திரித் துண்டு இருக்கா?''

''கொண்டு வரல்லே''

''அப்ப எப்படி நம்பிறதடா?''

குனிந்தபடியே நின்றான்.

''பொய்தானே சொன்னீர்?''

மீண்டும் மௌனம்.

''டேய் உண்மையைச் சொல்லு, கள்ளத்தில்தானே நிண்டனீ?''

தடி எடுத்தால்தான் உண்மை வெளிவரும். தடியைக் கையில் எடுத்தேன்.

''சொல்லு. ஏன் வரேல்லை?''

அவன் முகத்தில் எதுவித சலனமும் தென் படவில்லை. ஒரு அடி விழுந்தது.

அடியின் வலியினூடு சொன்னான்.

''வேலைக்குப் போனேன்.''

வேலைக்கா? 8 ஆம் வகுப்பில் இவனுக்கு யார் வேலை தரப்போகின்றார்கள்.

''என்ன வேலை?''

''தோட்ட வேலை''

''ஆற்றை தோட்டம்''

''தெரிஞ்ச ஆக்களின்ர''

''உனக்கு என்ன வேலை தருவினம்?''

பதட்டத்தில் சொன்ன அவன் பதில்

''தறை கொத்த''

நம்ப முடியாது, அவனது தோற்றத்திற்கு மண்வெட்டி அவனைத் தூக்கிவிடும்.

மறுபடி உறுக்கினேன்.

''பொய் சொல்லாதே, கள்ளப்பட்டுத் தானே பள்ளிக்கு நீ வாறதில்லை?''

''உண்மையா வேலைக்குப் போறனான்''

''சரி சொல்லு. என்ன வேலை?''

''அப்பாவோடை போறனான்''

''அப்பாவோடையா?''

''ஓம்''

''அப்பா என்ன வேலை?''

அவன் பதில் ஏதுவும் சொல்லவில்லை. நீண்ட நேரம் போய்விட்டதால் அவனை அந்தளவில் விட்டுவிட்டேன்.

பின்னர் ஓய்வு நேரத்தில் கூப் பிட்டுக் கதைத்தேன்.

''சொல்லு, அப்பா என்ன வேலை?''

அவன் தகப்பனின் வேலையைச் சொல்ல விரும்பவில்லை என்று எனக்குத் தெரிந்தது. நானும் விடுவதாக இல்லை.

''சொல்லு அப்பாவுடன் என்ன வேலைக்கு போறனீ?''

நீண்ட நேரத்தின் பின்னர் அவன் சொன்ன பதில் எனக்கு-உங்களுக்கு எவ்வாறு இருக்குமோ- அவ்வாறு இருந்தது.

''கசிப்பு காய்ச்சப் போறவர்''

''கசிப்பா?'' கடவுளே! இதற்கு நான் என்ன முடிவு எடுக்க முடியும்.

''ஏனப்பு இந்த வேலை?''

''வீட்டை சரியான கஸ்ரம் சேர்''

''உனக்கு எத்தனை சகோதரம்''

''ஏழு''

''நீ எத்தனையாவது?''

''இரண்டாவது''

''உனக்கும் சம்பளம் தருவினமா?''

''ஓம்''

''எவ்வளவு''

இருநூறும், ஒரு போத்தல் கசிப்பும்-

ஒரு போத்தல் கசிப்பு முதல் வடி கொடுப்பார்களாம். அதனைத் தண்ணீர் கலந்து விற்பார்களாம். அதிலும் கொஞ்ச காசு வருமாம்.

அவனது தாய் முட்டு வருத்தம் உள்ளவர் என்பதையும் அறிய முடிந்தது.

அவர்கள் பெரிய தோட்டக்காரர்கள், தாம் தோட்டம் செய்யும் பூமியில் இருந்து 20 வருடங்களுக்கு முன் எல்லாத்தையும் விட்டுவிட்டு ஓடி வந்தவர்கள் என்பதை யும் அவனிடம் இருந்து அறிய முடிந்தது.

அதிபரிடம் சொல்லி, தகப்பனைக் கூப்பிட்டுக் கதைத்தோம். சில உதவிக ளைச் செய்தோம். சிலநாள் ஒழுங்காக வந்தான். பிறகும் அதே சிக்கல்.

அந்த ஆண்டு முடிந்து 9 ஆம் வகுப்பில் அவன் பள்ளிக்கு வரவேயில்லை.

என்ன தொழில் செய்துகொண்டு இருக் கின்றான் என்பதும் தெரியவில்லை. ***



# நடராஜர் வடிவம் உணர்த்துவது என்ன?



எங்களில் பெரும்பாலானோருக்கு நடராஜரை ஒரு கடவுள் உருவமாகவும் சிலையாகவுமே தெரியும். ஆனால், இதில் பொதிந்துள்ள தத்துவார்த்த உண் மைகள் ஒரு சிலருக்குத்தான் தெரியும். இன்று பெரும் பாலும் நாட்டியம், இசை பயில்பவர்க ளிடம் நடராஜர் சிலை ஒரு சொத்தாக காணப்படுகிறது. ஆனால், செல்வந்தர்களிடம் இச்சிலை பெரிதும் அழகுசாதனப் பொருளாகவே காணப்படுகின்றது. இதன் அர்த்தம் அறிந்தவர்கள் ஆ! இவ்வளவு அர்த்தமுடை யவரா நடராஜர்! என வியப்பார்கள். நடராஜ மூர்த்தியை எமது இந்து சமயம் ஆனந்த தாண்டவமூர்த்தி எனக்கூறுகிறது. இவ் ஆனந்தத் தாண்டவத்தினைத் தாண்டவ மூர்த்தியாகிய சிவபெரு மான் சைவ உலகின் கோவிலாக விளங்கும் சிதம்பரத்திலே உள்ள கனகசபையிலே ஆடியதாகச் சான்றுகள் கூறுகின்றன.

நடராஜரின் ஆடற்கோலம் எமக்குப் பல உண்மைகளைக் கூறுகின்றன. அவற்றுள் இறைவனின் மிக முக்கியமான ஐந்தொழில்களையும் விளக்குவதால் இதனை பஞ்சகிருத்திய பரமானந்தத் தாண்டவம் எனக் கூறுவர். அதாவது நடராஜர் வடிவத்தில் உள்ள நான்கு கைகளிலே வலது கையிலே உள்ள உடுக்கை (டமருகம்) படைத்தல் தொழிலைக் குறிக்கின்றது. மற்றைய வலது அபயகரம் காத்தல் தொழிலைக் குறிக்கின்றது. அதுபோல இடது கைகளிலே ஒன் றில் உள்ள தீ அழித்தல் தொழிலையும் அதாவது பழைய வினைகளைச் சுடுவதை யும் குறிக்கிறது. அவர் முயலகன் எனும் குள்ளன் மீது ஊன்றியிருக்கும் திருப்பாதம் மறைத்தல் தொழிலையும் அதாவது ஆண வத்தின் தோற்றத்தை மறைத்தல், முன் னால் தூக்கிய திருப்பாதம் திருவடி தீட்சை அளிக்கும் அருளல் தொழிலையும் உணர்த்தி நிற்கின்றன. இவையே அடிப்படையான ஐந்து தொழில்களுமாகும். இதைவிட அவர் அணிந்துள்ள ஒவ்வொரு அணி கலன்களும் ஒவ்வொரு தத்துவத்தை எமக்கு விளக்குகின்றன அவ்றைப் பார்ப்போம்.

முன்னால் நீட்டிய அவரது இடது கை களில் ஒன்று இது 'வரஹஸ்தம்' எனப்படுகிறது. இது நீ முக்தியடையும் இடம் என்ற கருத்தைத் தருகிறது. இறைவனைச் சுற்றியுள்ள திருவாசி பிரபஞ்சத்தினையும் அதனுள் நின்றாடும் இறைவன் உலகம் முழுவதும் தான் வியாபித்திருப்பதையும் சிவனது முக்கண்கள் இச்சாசக்தி, கிரியா சக்தி, ஞானாசக்தி எனும் மூன்று சக்திகளையும் அவரது விரிந்த சடைமுடி பரந்த ஞானத்தையும் இறைவனின் செவியிலுள்ளதோடு, குழையும் சிவமும் சக்தியுமாய் நிற்கும் தோற்றத்தையும், தலையிற்சூடிய கங்கை கணக்கற்ற ஆற்றலையும் பூநூல் வேதத்தின் முடியாகிய பிரணவ காயத்திரியையும் கட்டியுள்ள கோவணம் 64 கலைகளாலும் அறிவிக் கப்படும் பரஞானமுமானவற்றையும் குறிக்கின்றது. மேலும், அவர் காலின் கீழுள்ள முய கலன் ஆணவ மலத்தின் அடையாளமாக வும் அவர் தன் உடற்பகுதிகளில் அணிந் துள்ள பாம்பணிகள் அவர் அன்பருக்கு எளியவன் என்பதையும் சூலம் அன்பர் களிற்கு மும்மல அழுக்கு அடையாதவாறு பாதுகாப் பதையும் குறித்து நிற்கின்றது. இது போலவே அவரிட முள்ள மணி, மழு, வாள், கபாலம், கபாலமாலை, திருவெண்ணீறு, பிறை, போன்றனவும் பல அர்த்தங் களை எமக்கு உணர்த்தி நிற்கின்றன. எனவே, இந்துசாசனத் தின் தத்துவங்கள் பலவற்றை விளக்கும் நடராஜ வடி வத்தை அழகு சாதனமாகப் பார்ப்பதைவிட்டு உலகத்தின் தோற் றத்திற்குக் காரணமாகிய இறைவனின் உண்மைத் தத்துவத்தை விளங்கி வழிபடவும், எனையோருக்கு இதனை உணரவும் செய்வது அவசியம்.

இதனால்தான் உலகத்தின் தோற்றத்திற்கு இறை வனின் ருத்திரநாட்டியமே காரணம் என்பதை உணர்த் தும் முகமாக 'பெருவெடிப்புப் பரிசோதனை' குழுவிற்கு இந்திய அரசி னால் ஒரு நடராஜர் சிலை அன்பளிப்பாக வழங்கப்பட்டதோ என எண்ணத்தோன்றுகின்றது. ***

## வார வசந்தம்

உ. உமாமகேஸ்வரி, மானிப்பாய்.



# மூடாத தமிழ் எழுத்துக்கள்

ஸ்ரீ.பிரசாந்தன்

''நான் ஆசிரியராகவும் பண்டிதராகவும் இருந்த காலம் போய் இப்போது நல்ல வாச கனாய் மட்டும் இருக்கின்றேன். ஆனால், தமிழ் மொழியில் உள்ள சில எழுத்துக்கள் இதுவரை பயன்படுத் தப்பட்டதாக அறியவும் இல்லை. வாசித்தபோது அறியவும் இல்லை. என்னுடைய தலைமயிர் மட்டும் வெளித்தோற் றத்திற்கு மாற்றம் பெற்று வேற்றுருவமும் கொண்டுவிட்டது.

இற்றைவரை தமிழ்மொழியில்உள்ள எழுத்துக்களின் மொத்த எண்ணிக்கை இருநூற்று நாற்பத்தேழு என்று அறிகின்றேன். அவை கூடியதாகவும் இல்லை. இருக்கின்ற எழுத்துக்கள் அனைத்தும் பயன்பட்டதாகவும் இல்லை''. செல்லையா என்ற ஒரு பழம் பெரும் வாசகர் நூலகத்தில் இன்னொருவருக்குக் கூறிய வார்த்தைகளே அவை.

உண்மையில் அவர் கூறிய கருத்துக்கள் நோக்கப்படத் தக்கது. உலகிலுள்ள மொழிகளில் நீண்ட பாரம்பரியமும் சிறப்பும் மிக்க ஒரு மொழியாகத் திகழ்வது தமிழ்மொழியாகும். உயிரெழுத்து, மெய்யெழுத்து என இரண்டு [illegible] தாலும் அவற்றின் மொத்த எண்ணிக்கை இருநூற்றுநாற் பத்தேழாகும். இவ்வெழுத்துக்களின் எண்ணிக்கையானது இரண்டாயிரம் ஆண்டுகளாகக் கூடவுமில்லை. குறையவு மில்லை. ஆனால் மாற்றம் பெற்று வந் துள்ளது. தமிழ்மொழி யினைக் கற் கவோ அல்லது கற்பிக்க விரும்பும் ஒருவரோ இவ் எழுத்துக்கள் அனைத் தையும் அறிந்திருக்கவேண்டும். ஒரு பிள்ளை தமிழ்மொழியை கற்கின்றதென் றால் இவ்வெழுத் துக்கள் அனைத்தையும் மனனஞ்செய்து எழுத்துப் பயிற்சி பெறு வது கட்டாயமாகின்றது. இங்கு அவதானிக் கப்படவேண்டிய விடயம் யாதெனில் தமிழிலுள்ள இருநூற்று நாற்பத்தியேழு எழுத்துக்களில் எல்லா எழுத்துக்களும் பயன்பாட்டில் உள்ளதா என்பதாகும்.

தமிழன் மகிமையும், சிறப்பையும் கூறும் போது தமிழ் மொழியிலுள்ள எழுத்துக்களின் எண்ணிக்கையை நினைவு கூருகின்றோம். அதிகளவான எழுத்துக்களால் பெருமையடைகின்றோம். தமிழ்மொழிக்குப் பஞ்சம் கிடையாதென்றும் கூறுகின்றோம். (தொடரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் நிகழ்ச்சித் திட்ட உதவியாளராகக் கடமையாற்றும் க.பாலமுருகன் அவர்களின் அன்புத் தந்தை

**பிரம்மஸ்ரீ சுவாமிநாதக் குருக்கள் கனகசபாபதிக் குருக்கள்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

வலயக் கல்வி அலுவலகம்,
தீவகம், வேலணை. (82138)

பணிப்பாளரும், அலுவலக
உத்தியோகத்தர்களும்.

## நீங்காத நினைவுகளில் ஈராண்டு...........



மலர்வு
07.12.1924

உதிர்வு
23.01.2007

திதி. 31.01.2009
பூர்வபக்க பஞ்சமி

### அமரர் கந்தர் அம்பிகைபாகன் (தம்பிராசா)

அன்பின் உறைவிடமே! குடும்பத்தின் ஒளிவிளக்கே!
கண்ணீரில் கரைந்தன ஈராண்டுகள்!
அன்பு மனங்களில் உங்கள் இனிய நினைவுகள் என்றும் அழியாது.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

"அம்பிகை வாசம்"
கூவில்,
புலோலி தென்மேற்கு,
புலோலி.
தொ.பே: 2264280

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவுகளில்



தோற்றம்
01.09.1959

மறைவு
23.01.2007

### திருமதி தவராசா பூபதி

திதி.பூர்வபக்க பஞ்சமி (31.01.2009 )

ஆண்டுகள்இரண்டு சென்றாலும் ஆறவில்லை எம்துயர்
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
அம்மா என்றழைக்க நீங்கள் இல்லையே!
எங்களுக்காக வாழ்ந்த அம்மாவே
மீண்டொரு முறைவந்து அன்புமொழி கூறிரோ!

உங்கள் ஆத்மா சாந்தியடைய அம்மனின் பாதக் கமலங்களைப் பற்றி நிற்கின்றோம்.

தபால்நிலைய வீதி,
கற்குளி, சாவகச்சேரி.

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

ஓம் ஸ்ரீராம ஜெயம்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அவனியில்
16.08.1933

ஸ்ரீவைகுண்டத்தில்
01.01.2009

### திருமதி தையல்நாயகி கிருஷ்ணசாமி

அன்பின் உறைவிடமாய் அறத்தின் வடிவமாய்
மங்காப் புகழ்பெற்ற எம்தாயே!
திங்கள் ஒன்று ஆனதம்மா உமைப்பிரிந்து
தினம் தினம் துடிக்கின்றோம் தரணியில் நாம்
உன் தங்கத் திருமுகம்காண தவியாய் தவிக்கின்றோம்
எங்கள் மனம் மகிழ வந்திடம்மா மீண்டும் நீ.

இன்று (31.01.2009) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எம் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்திபெற ஸ்ரீவெங்கடேசப் பெருமானை வேண்டுதல் செய்கின்றோம்.

ஓம்! சாந்தி!! சாந்தி!!!

உம் பிரிவால் துயருறும்:
மகள், மருமகன், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

69B,மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.



## சமய சந்நிதிகளில்

சித்தன்கேணி,ஜன.31

வடலியடைப்பு புதறானை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மணவாளக்கோல விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. (202-112)

* * *

யாழ்ப்பாணம், ஜன.31

கச்சேரி, நல்லூரிவீதி பாணன்குளம் நாச்சி அம்பாள் ஆலய கும்பாபிஷேகமும் மணவாளக் கோலவிழாவும்நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது. (202)

* * *

மருதனார்மடம் ஸ்ரீசுந்தர ஆஞ்ச நேயர் கோயிலின் இராஜகோபுர கும்பாபிஷேக தின மஹாதீப மஹாலக்ஷ்மி பூசை எதிர்வரும்12 ஆம் திகதி வியாழக் கிழமை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் காலை 8.30 மணிக்கு 108 சங்காபிஷேகம், முற்பகல்10 மணிக்கு தீப மஹாலக்ஷ்மி பூசை, 11 மணிக்கு சுமங்கலி சுவாசினி பூசையும் நடைபெறும். (204)

* * *

சுழிபுரம், ஜன.31

கந்தபுராண ஏடுகள் தேரில் வைத்து வலம் வரும் நிகழ்வு சுழிபுரம்மேற்கு ஸ்ரீ கதிர்காமவேலாயுத சுவாமி கோயிலில் தைப்பூசத் தினத்தன்று நடைபெறவுள்ளது. (202-28)

* * *

யாழ்ப்பாணம், ஜன.31

குருநகர் புதுமை மாதா தேவாலயத் தின் வருடாந்தத் திருவிழாவில் எதிர்வரும் 3 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை அதிகாலை 5.15 மணிக்கு திருப்பலியும் காலை 6.30மணிக்கு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் தலைமையில் திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து மாதா திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

கடந்த 25 ஆம் திகதி. கொடியேற்றத்துடன் இவ்விழாஆரம்பமாகியமை குறிப்பிடத்தக்கது. (202-160)

* * *

அளவெட்டி, ஜன.31

அளவெட்டிஅழகொல்லை விநாயகர் ஆலய இராஜதளகோபுர, மூலஸ்தான கும்பாபிஷேகம் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

விஷேட அபிஷேகங்கள் நடை, பெற்று விநாயகப் பெருமான் வீதியுலா வந்து அடியார்களுக்கு அருள் பாலிப் பார். (202-23)

* * *

சுழிபுரம், ஜன.31

மூளாய் கிழக்கு பொற்புலம்பதி மகா மாரி அம்மன்ஆலய கும்பாபிஷேகம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 7மணிக்கு நடைபெறவுள்ளது.

எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறும். (202-28)


## பதவி வெற்றிடங்கள்

**தேச நிர்மாணம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு**
**மீள் எழுச்சித் திட்டம் - உலக வங்கியின் நிதி உதவியுடன் செயற்படும் திட்டம்**
**சமுதாய முரண்பாட்டால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான சமூக ஜீவனோபாய திட்டம்.**

தேச நிர்மாணம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் கீழ் வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம் மற்றும் இணைந்த பிரதேசங்களான அநுராதபுரம், பொலனறுவை, மொனறாகலை, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் செயற்படும் மீள் எழுச்சித் திட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டியுள்ளன.

அவ்வப் பதவிகளுக்குரிய கல்வித்தகைமைகளும் ஏனைய தகைமைகளையும் பெற்றவர்களிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | பதவி வெற்றிடங்கள் | சேவை நிலையம் |
|---|---|---|
| 1. | மேலதிக திட்டப்பணிப்பாளர் | மட்டக்களப்பு |
| 2. | சமூக அபிவிருத்தி நிபுணர் | திருகோணமலை |
| 3. | சிரேஷ்ட பொறியியலாளர் | மட்டக்களப்பு |
| 4. | திட்டக்கணக்காளர் | வவுனியா |
| 5. | சிரேஷ்ட சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர் | திருகோணமலை |
| 6. | சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர் | கிளிநொச்சி, முல்லைத்தீவு, அநுராதபுரம் |
| 7. | ஜீவனோபாய அபிவிருத்தி உத்தியோகத்தர் | திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், அநுராதபுரம், பொலனறுவை, மொனறாகலை, புத்தளம் |
| 8. | சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் | வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், அநுராதபுரம், மொனறாகலை, புத்தளம் |
| 9. | நிதி மற்றும் வழிநடத்தல், மதிப்பீடு செய்தல் உத்தியோகத்தர் | திருகோணமலை, மொனறாகலை, புத்தளம் |
| 10. | சேகரிப்பு உத்தியோகத்தர் | திருகோணமலை |
| 11. | சுற்றாடல் உத்தியோகத்தர் | திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா |
| 12. | பால்நிலை உத்தியோகத்தர் | திருகோணமலை |
| 13. | சமூகவலுவூட்டாளர் | திருகோணமலை, வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், அநுராதபுரம், மொனறாகலை |
| 14. | பொறியியல் உதவியாளர் | அம்பாறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு |
| 15. | படவரைஞர் | திருகோணமலை, அம்பாறை, மொனறாகலை |
| 16. | முகாமைத்துவ உதவியாளர் | திருகோணமலை, வவுனியா, முல்லைத்தீவு, பொலனறுவை |
| 17. | சமூகவலுவூட்டாளர் - பாரிய நீர்ப்பாசனத்திட்டம் | திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா,மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் |
| 18. | சிரேஷ்ட தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர் | திருகோணமலை |
| 19. | தரக்கட்டுப்பாட்டு பொறியியலாளர்/ தொழில் நுட்பவியலாளர் | |

**விண்ணப்பதாரி WWW.ra-awakening.org எனும் இணையத்தளத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட முறையில் தகவலைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்கள் மாகாண/மாவட்ட மீள் எழுச்சித் திட்ட காரியாலயங்களில் உரிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தெளிவாக குறிப்பிடப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத்தபால் மூலம் 2009.02.10. ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக திட்டப்பணிப்பாளர், மீள் எழுச்சித் திட்டம், வரோதய நகர், திருகோணமலை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவிகளுக்குத் தனித்தனி விண்ணப் பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.**

[illegible],
[illegible],
மீள் எழுச்சித்திட்டம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 48 மணித்தியால யுத்த நிறுத்தம் மஹிந்த அரசின் மோசடி நாடகம்

## இந்த அறிவிப்பைக் கேட்டு தமிழரும் உலகநாடுகளும் ஏமாறவேண்டாம்; வைகோ, திருமாவளவன் தெரிவிப்பு





சென்னை,ஜனவரி31

முல்லைத்தீவில் இருந்து மக்கள் வெளியேறு வதற்கு இலங்கை அரசு அறிவித்திருக்கும் 48 மணிநேர காலக்கெடுவானது ஒரு மோசடி நாடகம். இந்த நயவஞ்சக அறிவிப்பைக் கேட்டு தமிழர்களும் உலக நாடுகளும் ஏமாந்துவிட வேண்டாம்.

- இவ்வாறு ம.தி.மு.க. பொதுச் செயலருமான வைகோ மற்றும் விடு தலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திரு மாவளவன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக நேற்று வைகோ வெளி யிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட் டிருப்பவை வருமாறு-

இலங்கையின் முல்லைத்தீவு பகுதியில், ஐந்தரை லட்சம் தமிழ் மக்கள் இலங்கை இரா ணுவத்தின் இடைவிடாத வான் தாக்குத லுக்கும், ஏவுகணைத் தாக்குதலுக்கும் உள் ளாகி, ஆயிரக்கணக்கில் கொல்லப்படும் கொடுமையைத் தடுக்க வேண்டும் என்பதற் காக, ஐக்கிய நாடுகள் சபை தாக்குதலை நிறுத்தும்படி கூறியது.

'பாதுகாப்பான பகுதி' என்றும், அங்கு தாக்குதல் நடைபெறாது என்றும் சிங்கள அரசு அறிவித்ததை நம்பி, அந்தப் பகுதிக் குச் சென்ற தமிழ் மக்கள், பெண்கள், குழந் தைகள் உள்பட 800 பேர்களை சிங்கள இரா ணுவம் தாக்கிக் கொன்றது. அதனை அடுத்து, அரசின் நலன்புரி நிலையங்களில் தஞ்சம் புகுந்த தமிழர்களுள், இளைஞர்கள் பிரித்து எடுக்கப்பட்டு, காடுகளுக்கு வாகனங் களில் ஏற்றிக்கொண்டு சென்று, அங்கே சுட்டுக்கொன்றுள்ளனர்.

இளம்பெண்களைத் தனியாகப் பிரித்து, அவர்களைப் பாலியல் கொடுமைக்கு ஆளாக்கி, அதன்பிறகு அவர்களை உயிரோடு எரித்துக் கொன்றனர். தமிழர்களின் இளந்தலை முறையை, பிள்ளைகளைக் கொன்று ஒழித்து தமிழ் இனத்தையே அழிக்க மஹிந்த அரசு திட்டமிட்டிருப்பது நன்றாகத் தெரிகிறது.

லட்சக்கணக்கான தமிழ் மக்களுக்கு உணவு இல்லை. காயப்பட்டுக் கிடப்பவர் களுக்கு மருத்துவ உதவிகள் இல்லை; மருந் துகள் இல்லை என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் இலங்கை அரசுக்குக் கண்டனம் தெரிவித்துள்ளார்.

எனவே, உலக நாடுகளை ஏமாற்று வதற்காக, இரண்டு நாள்களுக்கு இராணு வத் தாக்குதலை நிறுத்துவதாக சிங்கள அரசு அறிவித்து உள்ளது. இராணுவத் தாக்கு தலை மேலும் கொடூரமாகத் தீவிரப்படுத் துவதற்காகவே, சிங்கள அரசு மோசடி நாட கம் நடத்துகிறது.

போரை நிறுத்த வேண்டும் என்று இது வரையிலும் இந்திய அரசு கேட்கவே இல்லை. எனவே, இலங்கை அரசின் இந்த அறிவிப்புக்கு இந்தியா காரணம் அல்ல.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரின் கண்டனம்தான், தற்போது சிங்கள அரசின் அறிவிப்பு ஆகும். ஆனால், அதுவும் உலகை ஏமாற்றுவதற்காகவே!

நிபந்தனை அற்ற நிரந்தரப் போர் நிறுத் தம் செய்வதாக சிங்கள அரசு அறிவித்தால் அன்றி, தற்போதைய அறிவிப்பு சிங்கள அரசு நடத்தும் தமிழர் இன அழிப்புப் போரை மேலும் தீவிரப்படுத்துவதற்கும், உலக நாடுகளை ஏமாற்றுவதற்கும் செய்யப்பட் டுள்ளது.

இந்த நயவஞ்சக அறிவிப்பைக் கேட் டுத் தமிழர்களும், உலக நாடுகளும் ஏமாந்து விட வேண்டாம் - என்றுள்ளது.

திருமாவளவன் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

விடுதலைப் புலிகளிடமிருந்து தமிழர் களை வெளியேற்றுவதற்கென 48 மணி நேரம் ஒரு இடைக்காலப் போர் நிறுத்தம் செய் வதாக சிங்கள அரசு அறிவித்துள்ளது. இது ஈழத்தமிழர்களைப் பாதுகாக்க வேண்டும் என்னும் மனிதநேய அக்கறையோடு அறி விக்கப்பட்டதாக ஒரு நாடகத்தை சிங்கள - இந்திய அரசுகள் கூட்டுச் சேர்ந்து நடத் துகின்றன.

ஐ.நா. பேரவை உள்ளிட்ட சர்வதேசச் சமூகம் சிங்கள - இந்தியப் படையினரின் இன அழித்தொழிப்பு நடவடிக்கைகளை வெளிப்படையாகக் கண்டிக்கத் தொடங் கிய பிறகு இந்த நாடகத்தைத் தற்போது அரங்கேற்றுகின்றனர்.

48 மணி நேரம் கெடு விதித்த பின்னரும் தமிழர்கள் யாரும் வெளியேறவில்லை என்ப தால் அவர்கள் பொதுமக்கள் அல்லர். அனைவருமே புலிகள்தான் என முத்திரை குத்தி பொதுமக்களைக் கொன்று குவிப் பதற்குரிய சாக்குப் போக்குகளைச் சொல் லவே இந்த இடைக்காலப் போர் நிறுத் தத்தை அறிவித்துள்ளனர்.

மேலும் கூடுதலான ஆயுதங்களையும் படையினரையும் ஒருசேரக் குவித்து கொடூரமான இடைவிடாத தாக்குதல் களை நடத்து வதற்காகவே இந்த இடை நிறுத்தத்தை சிங்கள - இந்திய அரசுகள் செய் துள்ளன. சர்வதேச சமூகம் இந்தக் கூட்டுச் சதியை உணர்ந்து ஒரு நிரந்தரப் போர் நிறுத்தத்திற்கு வழிவகை செய்ய வேண்டும்.

சிங்களப் படையினரை நம்பி முல் லைத்தீவில் சிக்கியிருக்கும் தமிழர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வரு வதற்கான வாய்ப்புகளே இல்லை.

எனவே, ஒரு நிரந்தரப் போர் நிறுத்தத் தைச் செய்து போர்நிறுத்தத்துக்குரிய ஏற் பாடுகளைச் செய்ய சர்வதேச நாடுகள் முன்வர வேண்டும் என்பதே தமிழ்ச் சமூ கத்தின் விருப்பமாகும் - என்றுள்ளது.

(சி)



இலங்கையில் போரை நிறுத்தக் கோரி நேற்றுமுன்தினம் சட்ட பேரவையை முற்றுகையிட்ட பெண்களை பொலிஸார் தடுத்து நிறுத்திக் கைது செய்தபோது...

# இலங்கைத் தமிழர் விடயத்தில் கருணாநிதி தனது நிலையைத் தெளிவுபடுத்தவேண்டும்

## வலியுறுத்துகின்றார் ஜெயலலிதா

சென்னை, ஜன. 31

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தனது நிலைப்பாடு என்ன வென்பதை முதல்வர் கருணாநிதி தெளிவுபடுத்த வேண்டும் என் றும் - பேச்சு மூலம் தமிழர்கள் வாழும் பகுதிகளுக்கு உள்ளடக்கிய கூட்டுப் பேராட்சிக்குட்பட்ட சுயாட்சி கோருவதே நியாயமானது என்றும் அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா வலியுறுத்தி யுள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

இலங்கைத் தமிழர்களின் நலனுக்கு எதிராக நான் இருப்பதைப் போன்ற தோற்றத்தை ஏற்படுத்த கருணாநிதி முயல்கிறார்.



விடுதலைப் புலி கள் உட்பட அங்குள்ள போராளி அமைப் புகளை இலங்கைத் தமிழர்களின் காவ லர்கள் என ஒரு காலத்தில் அதிமுக கருதியதை நான் மறுக்கவில்லை. ஆனால் மதிப்புக் குரிய பல தமிழ்த் தலைவர்களை கொன் றதால், தமிழர்களின் பிரதிநிதி என்ற உரி மையை விடுதலைப் புலிகள் இழந்து விட் டார்கள்.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந் தியை கொன்றதன் மூலம் விடுதலைப் புலிகள் அமைப்பு நம்பத் தகுதியற்ற, ஆபத் தான அமைப்பு என்பது நிரூபணமானது.

இலங்கையில் வாழும் தமிழர்களை நாட்டின் இரண்டாம் தரக் குடிமக்களாக நடத்த இலங்கை அரசு எந்த முயற்சி எடுத் தாலும், அதனை அ.தி.மு.க. முழுமையாக எதிர்க்கும். சுய நிர்ணயத்துக்காகவும், சம உரிமைக்காகவும் போராடும் இலங்கைத் தமிழர்களுக்கு அ.தி.மு.கவின் முழு ஆத ரவு உண்டு.

ஆனால் அதற்காக ஆயுதம் ஏந்திப் போராடுவதையும், வன்முறையில் ஈடு படுவதையும் அ.தி.மு.க. கடுமையாக எதிர்க்கிறது. பேச்சு மூலம் அமைதியான வழியில் அரசியல் தீர்வு காணப்படுவதே இந்தப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க உதவும் என அ.தி.மு.க. நம்புகிறது.

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணத் தமிழர்களுக்கு மட்டுமில்லா மல், தோட்டத் தொழிலாளர், இஸ்லாமியர் உள்ளிட்ட இதர சிறுபான்மைத் தமிழர் களையும் உள்ளடக்கியதாக அரசியல் தீர்வு அமைய வேண்டும்.

மேலும் பேச்சுக்கான பொறுப்பை தமிழ் மிதவாதிகள், தமிழ் அரசியல் அமைப்பு கள் ஏற்க வேண்டுமே தவிர, தீவிரவாதிக ளிடம் ஒப்படைக்கக் கூடாது -என்றுள்ளது.

# சோனியாவின் உருவப் படம் எரிப்பு சட்டத்தரணிகள் - காங். மோதல்!

## 50 பேர் மீது வழக்கு

மதுரை,ஜன.31

இலங்கையில் அப்பாவி தமிழர்கள் கொல்லப்படுவதைத் தடுக்க வலியுறுத்தி நேற்றுமுன்தினம் 2ஆவது நாளாக, உச்ச நீதிமன்றின் முன் சட்டத்தரணிகள் நடத் திய மனிதச் சங்கிலிப் போராட்டத்தின் போது, காங்கிரஸ் கட்சியினரும், அக்கட் சிச் சட்டத்தரணிகளும் அங்கு கூடி, சோனியா காந்தியின் படம் எரிக்கப்பட்ட தைக் கண்டித்து கோஷம் எழுப்பினர். இதனால், அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இதன்பின், காங்கிரஸாருக்கும், மனிதச் சங்கிலியில் ஈடுபட்ட சட்டத்தரணிகளுக் கும் இடையே வாக்குவாதம் முற்றி தள்ளு முள்ளு ஏற்பட்டது. அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

சோனியா படம் எரிக்கப்பட்டதை கண் டித்து கோரிப்பாளையத்தில் மறியலில் ஈடுபட்ட காங்கிரஸ் கட்சியினர் 50 பேரைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய் தனர். பின்னர், மாலையில் அவர்களை விடுவித்தனர்.

இலங்கையில் போர் நிறுத்தத்தை வலி யுறுத்தி, உச்ச நீதிமன்ற மதுரைக் கிளை யின் முன்பு கடந்த புதனன்று நடந்த ஆர்ப் பாட்டத்தில் சட்டத்தரணிகள் சிலர், காங் கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் படத் தைத் தீ வைத்து எரித்தனர்.

சோனியாவின் படத்தை எரித்தது தொடர்பாக சட்டத்தரணிகள் சங்கச் செய லாளர் சுபாஷ்பாபு உட்பட 50 சட்டத்தர ணிகள் மீது ஒத்தக்கடை பொலிஸார் வழக் குப் பதிவு செய்தனர்.

# ஈழத் தமிழர்களுக்காக என் மகன் இறந்தமை பெருமையளிக்கின்றது

## முத்துக்குமாரின் தந்தை தெரிவிப்பு



நமது தொப்புள்கொடி உறவுகளான இலங்கைத் தமிழருக்காக தன் உயிரைத் தியாகம் செய்திருக்கிறான் என்று நினைக் கின்றபோது ரொம்பப் பெருமையாயி ருக்கு.

- இவ்வாறு ஈழத்தமிழ் உறவுகளை நினைவில் சுமந்தவாறு - உடம்பெல்லாம் தீயினில் எரிக்கின்ற போதும் 'ஈழத் தமி ழரைக் காப்பாற்றுங்கள்' என்று கதறியபடி தனது உயிரைத் தியாகம் செய்த முத்துக் குமாரின் தந்தை கூறினார்.

ஈழத்தமிழ் உறவுகளை நினைவில் சுமந் தவாறு நேற்றுமுன்தினம் சென்னையில் தீக் குளித்து இன்னுயிரைத் தியா கம் செய்த தூத் துக்குடியைச் சேர்ந்த பத் திரிகையாளர் முத் துக்குமாரது இறுதிச்சடங்கு நேற்று சென்னை யில் உள்ள அவரது வீட்டில் நடைபெற்றது.

அங்கு செய்தியாளர்களிடம் முத்துக்குமா ரின் தந்தை தனது மகனின் மரணம் குறித்து தெரிவிக்கையிலேயே இதனைத் தெரி வித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு-

என் மகன் இறந்ததை நினைத்தால் மன துக்கு வருத்தமாயிருக்கு. (அழுகிறார்).

ஆனால் அவன் நாட்டுக்காக, நமது தொப்புள்கொடி உறவுகளான இலங்கைத் தமிழருக்காக தன் உயிரைத் தியாகம் செய் திருக்கிறான் என்று நினைக்கின்றபோது ரொம்பப் பெருமையாயிருக்கு (அழுகை யைத் துடைத்துக் கொள்கிறார்) என்று தெரி வித்தார்.

# இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவரின் வலை - படகுகள் நாசம் என முறைப்பாடு

இராமேஸ்வரம், ஜன. 31

இராமேஸ்வரம் மீனவர்களை துப்பாக்கி முனையில் விரட்டியடித்து அவர்களின் வலை கள், படகுகளை இலங்கைக் கடற்படை நாசப்படுத்தியுள்ளது என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இதுகுறித்த விவரம் வருமாறு-

இராமேஸ்வரத்திலிருந்து கடந்த புத னன்று 600 படகுகளில் மீனவர்கள் மீன் பிடிக்க கடலுக்குச் சென்றனர். கச்சதீவு அருகே சோழக்குண்டு பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கைக் கடற்படையினர் 20 படகுகளைச் சுற்றி வளைத்தனர். மீனவர்களின் வலைகளை அறுத்தும், படகுகளை உடைத்தும் சேதப் படுத்தினர்.

பின்னர், துப்பாக்கி முனையில் விரட்டி யடித்தனர் என மீனவர் தரப்பில் கூறப்படு கிறது. மீனவர்களின் படகு, வலை, மீன் களின் சேதத்தின் மதிப்பு ரூபா ஒரு கோடி என்று மீன்வளர்ச்சித் துறை அதிகாரிகள் கணக்கிட்டுள்ளனர்.

இதுகுறித்து தமிழ்நாடு, பாண்டிச்சேரி மீனவர் கூட்டமைப்பு பொதுச்செயலர் கூறுகையில் -

இலங்கை அரசை பற்றி தமிழகத்தில் யார் பேசினாலும் மீனவர்களை இலங்கை கடற்படை அடித்துத் துன்புறுத்துகிறது. இதில், மத்திய அரசு தொடர்ந்து பாராமுக மாக உள்ளது. இலங்கைக் கடற்படையின் தாக்குதலில் இருந்து தமிழக மீனவர்களை காக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# COMPUTER EXPRESS
Institute of Information Technology
167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 0212228250, 0777222422

இருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking
Course Fee : 2000/=

**Diploma in Video Editing**
முன்னணி Video Mixing Software களூடாக
❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter ❖ Capturing
Course Fee : 3000/=

**Diploma in Graphic Designing**
❖ Adobe Photoshop ❖ Corel DRAW ❖ Cool3D Studio ❖ Micro Media Flash
Course Fee : 2000/=

**Diploma in Computerized Accounting**
Course Fee : 3500/=

வகுப்புக்கள் ஆரம்பம் :02/02/2009 09.00AM


## கண்ணீர் அஞ்சலி

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் புங்குடுதீவு பொதுசுகாதாரப் பரிசோதகர் கோபாலு அனுதர்சன் அவர்களின் பாசமிகு மைத்துனரான

**பசுபதி விநாயகமூர்த்தி** (கிராம அலுவலர், புங்குடுதீவு)

அவர்கள் 27.01.2009 செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவி[illegible]தோடு அவரின் ஆத்ம சாந்திக்காகவும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்

நலன்புரிச்சங்கம், சு.வை. அதிகாரி பணிமனை, ஊர்காவற்றுறை.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11 | 01 |
| ★ | ★ |
| 04 | 01 |
| ★ | ★ |
| 1936 | 2009 |

## அமரர் தங்கம் தம்பையா

சந்திரனும் சூரியனும், சார்ந்த பல தாரகையும்
சுந்தரமா நல்லொளியைச் செகத்திற்கு அளித்தாலும்
வீட்டில் ஒரு கைவிளக்கே, வேண்டும் ஒளி தருவதற்கு
உற்றார், உறவினர்கள் உலகில் இருந்தாலும்
பெற்ற அன்னை இல்லையென்றால் பிறந்த இல்லம் சூனியமே

இன்று (31.01.2009) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பசுபதி குழந்தை வேல்,
"பத்மா ஓராட்வெயர்",
கர்ப்பமலை, வல்வெட்டித்துறை.
021 226 3557

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## விண்ணக வாழ்வின் ஓராண்டு நினைவு நாள்



மண்ணில்: 24.03.1942
விண்ணில்: 31.01.2008

அமரர்
**பிலிப்பு பிரகாசராஜா**
(பெரியதம்பி)

ஆண்டு ஒன்றும் சென்றதுவோ
ஆறுமோ எம் நெஞ்சம்!
ஆறுதல் சொல்ல ஆரிருந்தென்ன
உங்கள் அன்பிற்கு ஈடாகுமா?
தேறுதல் வார்த்தைகளால்
எம்துயர் நீங்கிடுமா?
கண்ணை இமை காப்பதுபோல்
எம்மைக் காத்திருந்தீர் ஆயினும்
காலன்தான் கவர்ந்தனனே உம் உயிரை
கண்களில் நீர் இல்லை ஐயா
கவலையால் மனம் ஆழ்ந்ததையா
என்றும் காத்திருப்போம் பார்த்திருப்போம்!
எம்மைக் காண வருவீரென்று

யாழ்ப்பாணம்.

என்றும் உம் நினைவில்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி வடக்கு, ஜன. 31

வலி தெற்கு உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையேயான பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் இன்று காலை 8.30மணிக்கு மல்லாகம் கோட்டைக்காடு ஸ்ரீ முருகன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

பங்கு பற்றும் கழகங்கள் அனைத்தையும் உரிய நேரத்திற்கு மைதானத்திற்கு சமுகம் தரும்படி கேட்கப்பட்டுள்ளது. (202-186)

* * *

வலி. வடக்கு, ஜன. 31

வலி. வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்று வரும் உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

* மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக்கழகம் எதிர் காங்கேசன் துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம்.
* மல்லாகம் குளமங்கால் ஆபிரகாம் விளையாட்டுக் கழகம் எதிர் அளவெட்டி கலைவாணி விளையாட்டுக்கழகம்.

(202-86)

## முகாமைத்துவ பயிலுநர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு

இலங்கை வங்கி முகாமைத்துவ பயிலுநர்கள் பதவிக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களை உதவிப் பொது முகாமையாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் எடுத்த முயற்சி காரணமாக இந்தப் பதவிக்கான நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த சாதகமான ஏதுநிலை ஏற்பட்டுள்ளது என்றும்-

அதற்கு முன்னோடியாக பதிவுகளை உடன் மேற்கொள்ளும்படியும்- கேட்கப்பட்டுள்ளது. (1)

### காணி விற்பனைக்குண்டு

சுச்சேரி - நல்லூர் வீதியில் கடை மற்றும் வீடு கட்டக் கூடிய 2½ பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- 021 222 3243 0779906264

### தேவை

வெட்டித் தைப்பவர்கள், தைப்பவர்கள், பயிலுநர் தேவை.
தொடர்பு: 91,கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

### ஆடு விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய நல்ல இன கடா ஆட்டுக்குட்டி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 180/01, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

### மாடு விற்பனைக்கு

கன்று ஈன்று 10 நாள்கள் கொண்ட பால் மாடு கன்றுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
எஸ். துரைச்சாமி,
39/3, இராசாவின் தோட்டம்,யாழ்ப்பாணம்.

### தவறிவிட்டது

மீசாலை கிழக்கு, சித்தரவேலாயுதர் வீதியைச் சேர்ந்த வசந்தகுமார் புனிதம் என்பவருடைய அடையாள அட்டை உட்பட பெறுமதியான கையடக்கத் தொலைபேசியுடன் வேறு பொருள்களும் அடங்கிய பேர்ஸ் ஒன்று 26.01.2009 அன்று சாவகச்சேரி ப.நோ.கூட்டுறவுச் சங்க மீசாலை 6 ஆம் கிளையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி சங்கக் கிளையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

### விற்பனைக்கு

NPJB-XXXX இலக்க ஆட்டோ விற்பனைக்குண்டு.
தொடர்பு: சுப்பிரமணியம் சித்திரன்,
கயிலாயபிள்ளை வீதி,
கச்சாய் ரோட்,
சாவகச்சேரி.

### வீடு வாடகைக்கு

இல: 38/1, சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: [illegible]
060 221 6803

## கண்ணீர் அஞ்சலி



புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்தவரும் புங்குடுதீவில் கிராமசேவையாளராகக் கடமையாற்றியவரும், வடஇலங்கை சர்வோதயத்தின் இயக்குநர் சபை உறுப்பினருமாகிய

**பசுபதி விநாயகமூர்த்தி** (கிராம அலுவலர்)

அவர்களின் திடீர் மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சிவயோக சுவாமிகள் பாதம் நினைந்து பிரார்த்திக்கின்றோம்.

வட இலங்கை சர்வோதயம்,
புங்குடுதீவு.

வடஇலங்கை சர்வோதய குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### சபாரத்தினம் மகேஸ்வரன்

(ஓய்வுபெற்ற மருந்துக் கலவையாளர், யாழ் போதனா வைத்தியசாலை, தற்பொழுது மாலைதீவு)

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிட மாகவும் மாலை தீவில் கடமை செய்தவருமாகிய சபாரத்தினம் மகேஸ்வரன் (ஓய்வு பெற்ற மருந்துக் கலவையாளர், யாழ். போதனா வைத்தியசாலை, தற்பொழுது மாலைதீவு) 29.01.2009 வியாழக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை சபாரத்தினம்- விசாலாட்சி தம்பதியினரின் புத்திரனும், நாகலிங்கம் இராசரத்தினம்(ஓய்வுபெற்ற லிகிதர், சுகாதார திணைக்களம்), காலஞ்சென்ற இரத்தின பூபதி தம்பதியினரின் மூத்த மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், டிலக்ஷா(கணக்காளர், K.P.M.G நிறுவனம், கொழும்பு), நிரஞ்சா(கணக்காளர், K.P.M.G) ஆகியோரின் அன்பு தந்தையும், யோகீஸ்வரன்(இளைப்பாறிய M.LT) சுந்தரேஸ்வரன்(இ.போ.ச- வடக்கு), நகுலேஸ்வரன் ஆகியோரின் சகோதரனும், பத்மினி, சிறீகாந்தா(ஓய்வுபெற்ற பொறியியலாளர், கட்டடத் திணைக்களம்), சிறீராஜாதேவி, சர்வேஸ்வரன் (ஆசிரியர், கோண் டாவில் இராமகிருஷ்ணா மகாவித்தியாலயம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நாளை (01.02.2009) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ ரும் ஏற்றுக் கொள்ளவும்.

44A, வண்டவற் பிளேஸ்,
தெகிவளை, கொழும்பு.
தொஇபே.இல: 2736787

தகவல்: ச.சுந்தரேஸ்வரன்(சகோதரன்)
தொ.பேசி.இல: 021 2224006
இ.சர்வேஸ்வரன்(மைத்துனர்)
நவரத்தினராஜா வீதி, கோண்டாவில்.

### திருமதி சரஸ்வதி நவரத்தினம்



மடத்தடி, அச்சுவேலி வடக்கை பிறப்பிடமாகவும் தெஹிவளை, வைத்தியா வீதியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்டிருந்தவரான திருமதி சரஸ்வதி நவரத்தினம் 28-01-2009 (புதன்கிழமை) அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் நவரத்தினம்(C.T.B. உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் - செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்துரை, கந்தையா (பிரான்ஸ்), சிவசம்பு(பிரான்ஸ்), லிங்கேஸ்வரி (நெதர்லாந்து) ஆகியோரின் அன்பு சகோதரியும், நிமலதாஸ (சுவிஸ்), கமலதாஸ்(கனடா), சஜிந்தா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், வனிதாஞ்சலி (சுவிஸ்), துசித்தா (கனடா), ஸ்ரீரஞ்சன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், டிஷா(கனடா), யனுஷா(கனடா), தினிஸ் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 30-01-2009 அன்று Midland Shecperd, Canada மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 02-02-2009 அன்று இறுதிக்கிரியைகள் நடைபெறும்.

தகவல்:சி.மிதிலன்
தொடர்பு: 0019058971458(கனடா)

### காசியர் நடராசா (அனுஷா லொறி முன்னாள் உரிமையாளர்)

ஆவரங்கால் மேற்கு, சிவன் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காசியர் நடராசா நேற்று (30.01.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காசியர் - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கணபதி- சிதம்பரத்தின் மருமகனும் பூமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மனோகரராசா, ஜெயராசா (சுவிஸ்), நவீந்திரராசா (கனடா), ராமச்சந்திரன் (ஜேர்மனி), புஸ்ப ராசா, அனுசா ஆகியோரின் அன்புத் தந்தையும் கெங்கேஸ்வரி (சுவிஸ்), றஜனி (கனடா), சிவகுமார் (வ.கி. பிரதேச சபை, புத்தூர்) ஆகியோரின் மாமனும் பிரவின், பிரஜீப், சஜீ ரன், சஜீரா ஆகியோரின் பேரனும் அமரர் மாணிக்கம், செல்லம்மா, நாகம்மா, அமரர் பகவதி, சிவசோதி ஆகியோரின் சகோதரரும் பவளம், வரதலிங்கம், அமரர் சின்னராசா, நாகராசா, யோகேஸ்வரி, சரவணமுத்து, அமரர் அன்னலிங்கம், அன்னம்மா, நல்லம்மா, செல்வராசா, செல்வரத்தினம், சீவரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2009) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் ஆவரங்கால் கரதடி இந்து மயானத்திற்கு தகனக்கிரிகைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி,
ஆவரங்கால்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஈழத் தமிழர்களின் அவலத்தை நீக்கக்கோரி தீக்குளித்து உயிர்த்தியாகம் செய்த இளைஞர் முத்துக்குமாரு பூதவுடலுக்கு அரசியல் வாதிகள் அஞ்சலி செலுத்துவதை முதல் வரிசைப் படங்களில் காணலாம்.
அஞ்சலி செலுத்தத் திரண்ட பொதுமக்களையும் மண்டை ஓடுகள் மற்றும் எலும்புகளை வைத்து மாணவர்கள் ஒப்பாரி வைப்பதையும் கீழ் வரிசைப் படங்களில் காணலாம்.

# முத்துக்குமாரின் உடலை அடக்கம் செய்வதில் சிக்கல் அரசியல் வாதிகளின் முடிவுக்கு மாணவர்கள் எதிர்ப்பு

சென்னை, ஜன.31

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட வலியுறுத்தி சென்னையில் நேற்றுமுன் தினம் வாலிபர் முத்துக்குமார் தீக்குளித்து உயிர்த் தியாகம் செய்தார். பிரேத பரிசோதனைக்கு பிறகு முத்துக்குமாரின் உடல் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

முத்துக்குமாரின் உடலுக்கு அனைத்துத் தரப்பினரும் அஞ்சலி செலுத்துவதற்கு வசதியாக கொளத்தூர் வியாபாரிகள் சங்க கட்டடம் முன்பு பெரிய மேடை அமைக்கப்பட்டது. நேற்று முன்தினமிரவு அந்த மேடைக்கு முத்துக்குமாரின் உடல் எடுத்து வரப்பட்டு குளிர்சாதன பெட்டியில் வைக்கப்பட்டது.

நேற்று சென்னையில் உள்ள கல்லூரி மாணவர்கள் திரளாக வந்து முத்துக்குமாரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்கள். செங்கல்பட்டில் 7 நாள்கள் உண்ணா விரதம் இருந்து கவனத்தை ஈர்த்த மாண வர்களும், கொளத்தூர் வந்து அஞ்சலி செலுத்தினார்கள்.

நேற்றுக்காலை 10 மணிக்கு முத்துக்குமாரின் உடல் அடக்கம் செய்யப்படுவதாக இருந்தது. ஆனால் தமிழகமெங்கிலும் இருந்து மருத்துவ, சட்டக்கல்லூரி, கலைக் கல்லூரி மாணவர்கள் வந்து முத்துக்குமாருக்கு அஞ்சலி செலுத்துவதால் நேற்று மாலை உடல் அடக்கம் செய்யலாம் என்று அரசியல்வாதிகள் முடிவெடுத்தனர்

முத்துக்குமார் தனது கடைசிக்கடிதத்தில்.. ''என் பிரேதத்தை உடனே எரித்து விடாதீர்கள். துருப்புச் சீட்டாக வைத்துக் கொண்டு முடிந்தவரை போராடுங்கள்'' என்று சொல்லியிருக்கிறார்.

அதனால் சீக்கிரத்தில் உடல் அடக்கம் செய்ய மாட்டோம் என்று மாணவர்கள் பிடிவாதமாக இருந்தனர். அவர்கள் மேலும், முத்துக்குமாரின் உடல் அடக்கம் செய்வதைப் பொறுத்தவரை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். அரசியல் வாதிகள் தலையிடாதீர்கள் என்று சொல்லி வருகின்றனர்.

இதனால் முத்துக்குமாரின் உடல் அடக்கம் வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்று தெரிகிறது.

இந்நிலையில், திரைப்பட ஒளிப்பதிவாளரும், இயக்குநருமான தங்கர்பச்சான்-

முத்துக்குமரன் ஆவேசமாக தனது எண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளார். 'நான் இத்தனை காலம் திரைத்துறையில் இருந்தும் முத்துக்குமார் எடுத்த முடிவு போல் எடுக்க நினைக்கவில்லை. இதற்காக நான் வெட்கப்படுகிறேன். என் பிரேதத்தை துருப்பு சீட்டாக வைத்துக்கொண்டு போராடுங்கள்' என்று சொல்லியிருக்கிறார் முத்துக்குமார். இந்த ஒரு வாசகம் போதும். வாருங்கள் இளைஞர்களே போராடுவோம். இளைஞர்களால்தான் இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு தர முடியும்'' - என்றார்.

தமிழ் சினிமா பிரபலங்களான நடிகர் சத்யராஜ், இயக்குநர் சேரன், வடிவேல், சரத்குமார் ஆகியோரும் வந்து முத்துக்குமாருக்கு அஞ்சலி செலுத் தினர்.

அப்போது சேரன், ''முத்துக்குமார் தனது கடைசிக்கடிதத்தில்..''என் பிரேதத்தை உடனே எரித்து விடாதீர்கள். துருப்புச் சீட்டாக வைத்துக் கொண்டு முடிந்தவரை போராடுங்கள் என்று சொல்லியிருக்கிறார். அதனால் சீக்கிரத்தில் உடல் அடக்கம் செய்யக்கூடாது.

இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் வரை முத்துக்குமாரின் உடலை அடக்கம் செய்ய சம்மதிக்கக் கூடாது. அப்போதுதான் முத்துக்குமாரின் ஆத்மா சாந்தியடையும்'' என்று தெரிவித்தார். இவரது பூதவுடல் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் ராமதாஸ், தலைவர் கோ. க. மணி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன், தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், திராவிட இயக்க தமிழர் பேரவையின் செயலாளர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், திரைப்பட நடிவகர் டி. ராஜேந்திரன், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவைத் தலைவர் த.வெள்ளையன், பாரதிய ஜனதாக் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் தமிழோசை சௌந்தராஜன், விஜயகாந்த் கட்சி சார்பில் சதீஷ் 100 பேருடன் வந்து மலர் வளையம் வைத்து வண்ணக்கம் செலுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அரசின் போர்நிறுத்த அறிவிப்பை புலிகள் மதிக்கவில்லை என தி.மு.க. விசனம்

## ஆனால் மற்றைய கட்சிகள் அதை அடியோடு நிராகரிப்பு

சென்னை, ஜன. 31

இலங்கை அரசு வெளியிட்ட 48 மணி நேர போர்நிறுத்த அறிவிப்பை விடுதலைப் புலிகள் இயக்கம் மதிக்கவில்லை எனக் குறிப்பிட்டு அது குறித்து விசனம் தெரிவித்திருக்கின்றார் தமிழக நிதியமைச்சரும், தி.மு.க. பொதுச் செயலாளருமான க.அன்பழகன்.

நேற்றுக்காலை தமிழக சட்டசபையில் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் பீற்றர் அல் போன்ஸ் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள மக்கள் அங்கிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு 48 மணித்தியாலத்துக்குள் வெளியேறு வதற்கு பாதுகாப்பான வழி செய்து தரப்படும் என்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் மாலையில் விடுத்த அறிவிப்பை, '48 மணி நேர யுத்த நிறுத்தம்' என்று சித்திரித்து, அதையொட்டித் தமிழகத் தலைவர்கள் பலரும் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

தமிழகத்தில் ஆளும் தி.மு.கவின் தலைவரும் முதல்வருமான கலைஞர் மு.கருணாநிதி சுகவீனம் காரணமாக நேற்றும் தமிழக சட்டசபைக்கு சமுகம் தராத நிலையில், அவருக்கு அடுத்து கட்சியில் மூத்த நிலையில் உள்ள நிதி அமைச்சர் க.அன்பழகன் இலங்கை விடயம் குறித்து அங்கு கருத்து வெளியிட்டார். அவர் அங்கு கூறியவை வருமாறு:-

இந்தியாவின் தலையீட்டின் பேரில் அப்பாவித் தமிழ் மக்களைக் காப்பாற்ற 48 மணிநேரம் போர்நிறுத்தம் செய்வதற்கு இலங்கை அரசு முன்வந்துள்ள நிலையில், விடுதலைப் புலிகள் ஏன் அதை மதிக்கவில்லை?

இலங்கை அரசின் தற்காலிக போர் நிறுத்தத்தை ஐ.நா.கூட வரவேற்றுள்ளது. போர் நடைபெறும் பகுதியிலிருந்து அப்பாவி மக்கள் வெளியேறப் புலிகள் அனுமதிக்காதமை ஆச்சரியமளிக்கிறது.

புலிகளின் பகுதிகளில் பாதுகாப்பாக இருக்கலாம் என்று கருதி ஏராளமான மக்கள் அங்கு அடைக்கலம் தேடினர். ஆனால், எதிர்பாராத விதமாக இருதரப்பிலும் நடைபெறும் மோதலில் அவர்கள் கொல்லப்பட்டு வருகின்றனர்.

இலங்கைத் தமிழர்களைப் பாதுகாப்பதற்கான முதல் நடவடிக்கைதான் வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜியின் இலங்கைப் பயணம். தமிழர்கள் வாழும் பகுதிகளில் அமைதி ஏற்பட இதுபோல் பல நடவடிக்கைகளை நாம் எடுக்க வேண்டும்.

போா நடைபெறுவதை நம்மிடம் தெரிவிக்கக்கூட இலங்கை அரசு விரும்பவில்லை. இது தொடர்பாக அவர்களிடம் நாம் முறையிட்டால் கூட 'தீவிரவாத இயக்கத்தினருக்கு எதிராகத் தான் போர் நடைபெறுகிறது' என்று அவர்கள் கூறுவார்கள்.

இந்திய - இலங்கை அமைதி ஒப்பந்தத்தைத் தாம் [illegible] என ராஜ பக்ஷ கூறியிரு[illegible] இலங்கை அர[illegible]கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்பட அந்நாட்டு அரசிடம் முறையிட வேண்டும். - இவ்வாறு அன்பழகன் கூறினார்.

இதற்கிடையில் -

இலங்கை ஜனாதிபதியின் 48 மணி நேரக் காலக்கெடு அறிவிப்பு வெறும் மோசடி என ம.தி.மு.கவின் வைகோவும், விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் திருமாவளவனும் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

இலங்கை அதிபரின் அறிக்கை ஒரு மாயையை ஏற்படுத்தும் எத்தனம் என தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் விமர்சித்திருக்கிறார்.

முழுமையான போர்நிறுத்தமும், அதனை ஒட்டிய அமைதிப் பேச்சுமே அவசியமானவை எனத் தமிழக இடதுசாரித் தலைவர்கள் கருத்து வெளியிட்டிருக்கின்றார்கள்.

# வன்னியிலிருந்து வரும் மக்களுக்கு உதவுமாறு அமைச்சர் டக்ளஸ் கோருகிறார்

யாழ்ப்பாணம், ஜன. 31

வன்னிப்பகுதியில் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் நோக்கி வரும் எமது மக்களுக்கு மனிதாபிமான ரீதியில் அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு யாழ். குடாநாட்டு மக்கள் உட்பட அனைத்து தரப்பினரும் முன்வர வேண்டும்.

சமூக சேவைகள் மற்றும் சமூகநலத் துறை அமைச்சரும் வட மாகாணத்திற்கான விசேட செயலணியின் தலைவருமான டக் எஸ் தேவானந்தா இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று நடைபெற்ற பொதுமக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா, விடுதலைப்புலிகளின் பிடியில் இருந்து ஏ-9 பாதை விடுவிக்கப்பட்டுள்ளதால் [illegible] நன்மையடையப் போவது குடாநாட்டு மக்களேயாவர். இது போன்று பயங்கரவாதம் முற்றுமுழுதாகத் தோற்கடிக்கப்படும்போது அனைத்துத் தமிழ் பேசும் மக்களும் பாரிய நன்மைகளை அடைவார்கள். புலிகள் தங்களது இறுதிப் பாதுகாப்பு அரணாக அப்பாவி பொதுமக்களையே பயன்படுத்தி வருகின்றனர் என்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்த மக்களை விடுவித்து கொள்வதும், விடிவிக்கப்பட்டு வரும் மக்களைப் பேணிப் பாதுகாப்பதும் இன்றும் எம் முன்னுள்ள பாரிய பொறுப்பாக உள்ளது என்றும் அவர் சொன்னார்.

வன்னியிலிருந்து வரும் மக்களின் பல்வேறு தேவைகள் குறித்து அரச மட்டத்தில் உரிய நடவடிக்கைகளை தான் எடுத்து வரு வதாகவும் குடாநாட்டில் உள்ள மக்கள் உட்பட அனைத்துத் தரப்பினரும் இம் மக்களின் நலன் கருதி செயற்பட முன்வர வேண் டும் எனவும் - அமைச்சர் கேட்டுக் கொண்டதாக அமைச்சு நேற்று வெளி யிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துக்குமாருக்கு புலிகள் அஞ்சலி!

கொழும்பு, ஜன.31

ஈழத் தமிழர்களுக்காக தனது உயிரை தற்கொடையாக்கிய வீரத் தமிழ் மகன் முத்துகுமாருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீர வணக்கம் செலுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா. நாடேசன் நேற்று வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

தமிழீழத்தில் சிங்களப் பேரினவாத அரசின் இன அழிப்புப் போருக்கு எதிராக தமிழீழ மக்கள் நடத்தி வரும் விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும் சிங்கள அரச படைகளின் கொடூரமான தமிழின அழிப்புப் போருக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், ஏழு கோடி தொப்புள் கொடி உறவுகளான தமிழக மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் முகமாக தீக்குளித்து தனது இன்னுயிரை அர்ப்பணித்த வீரத் தமிழ் மகன் முத்துக்குமாருக்கு தமிழீழ மக்கள் சார்பிலும், எமது விடுதலை இயக்கத்தின் சார்பிலும் வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

உலக தமிழினத்தின் வரலாற்றில் அன்புத் தம்பி முத்துக்குமாருக்கு என்றுமே அழியாத இடம் உண்டு.

அன்புத் தம்பியின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமிழீழ மக்களுக்கான ஏழு கோடி தமிழக உடன்பிறப்புகளின் தொடர்ச்சியான போராட்டங்கள் உலகத்தின் மனச்சாட்சியைத் தட்டி நிற்கின்றன. உங்களின் தொடர்ச்சியான போராட்டங்களுக்கு உலகத் தமிழினத்தின் வரலாற்றில் குறிப்பாக தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் என்றுமே தனித்துவமான இடம் உண்டு.

எமது மக்கள் சிங்கள அரசின் கொடுமையான இன அழிப்புப் போருக்கு முகம் கொடுத்து நிற்கும் இவ்வேளையில் உங்களின் எழுச்சி கண்டு மன ஆறுதலும் உற்சாகமும் அடைகின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# மட்டக்களப்பு, மன்னாரில் நேற்று ஹர்த்தால்

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு விடுத்த அழைப்பின் பேரில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தமிழ் பிரதேசங்களில் நேற்று வழமை நிலை பாதிக்கப்பட்டிருந்தது.

இதன் காரணமாக செங்கலடி, வாழைச் சேனை உட்பட தமிழ்ப் பிரதேசங்களில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

அதேவேளை, மட்டக்களப்பு நகரில் வர்த்தக நிலையங்கள் மூடப்படக் கூடாது என நேற்று மாலை இராணுவத்தினர் அறிவித்தனர் என்றும் கூறப்படுகின்றது. நேற்றுக் காலை மூடப்பட்டிருந்த வர்த்தக நிலையங்கள் இராணுவத்தினரின் உத்தரவுக்கு அமைய மீண்டும் திறக்கப்பட்டன என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இருப்பினும் நகரில் மக்கள் நடமாட்டம் வழமையை விட குறைவாக இருந்தமையினால் நகரின் இயல்புநிலை பாதிக்கப்பட்டிருந்தது.

மாவட்டத்தில் போக்குவரத்துச் சேவைகள் வழமையை விட மிக குறைவாகவே காணப்பட்டன. மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே போக்குவரத்துச் சேவைகள் இடம்பெற்றன. எனினும், பயணிகள் எண்ணிக்கை குறைவாகவே காணப்பட்டது. மாவட்டப் பாடசாலைகள் மாணவர் வரவின்மையினால் இயங்கவில்லை. அரச மற்றும் தனியார் காரியாலயங்களைப் பொறுத்தவரை ஊழியர்களின் வரவில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக அநேகமானவை மூடப்பட்டே இருந்தன.

இதேவேளை மன்னாரிலும் நேற்று சில பகுதிகளில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. (சி)

# சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகத்தை தாக்க முயன்ற நாற்பது மாணவர்கள் கைது!

கொழும்பு, ஜன. 31

சென்னையில் உள்ள இலங்கைக்கான பிரதி உயர்ஸ்தானிகராலயத்தை தாக்க முயன்ற சட்டக்கல்லூரி மாணவர்கள் 40 பேர் நேற்று தமிழக பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

முத்துக்குமரனின் மரணத்தால் வெகுண்டெழுந்த சேலம் சட்டக்கல்லூரி மாணவர்கள் நேற்றுமுன்தினம் சேலத்தில் இருந்து சென்னை நோக்கிப்புறப்பட்டு நேற்றுக் காலை வந்தடைந்தனர்.

பின்னர் நேற்றுக் காலை 10.30 மணியளவில் பெரியார் திராவிடர் கழகத் தோழர்களுடன் இணைந்து சட்டக்கல்லூரி மாணவர்கள் பிரதி இலங்கைத் தூதரகத்தை தாக்க முற்பட்டவேளையிலேயே அவர்கள் தமிழக பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

அதேவேளை, நேற்றுமுன்தினம் இலங்கை வங்கியைத் தாக்கினார்கள் என்ற குற்றச்சாட்டில் பொலிஸார் திராவிடர் கழகத்தின் வழக்கறிஞர் அமர்நாத், கேசவன் ஆகியோரை நேற்றுக் காலை கைது செய்து சிறையில் அடைத்தனர். (அ-சி)

## உடனடி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசையும், விடுதலைப் புலிகளையும் மோதலை உடனடியாக நிறுத்துமாறு ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் வேண்டுகோள் விடுக்கின்றது.

மேலும், உடனடியாக யுத்த நிறுத்தத்தில் ஈடுபடுமாறும் மோதலில் சிக்கியுள்ள மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் செல்வதற்கு அனுமதிக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (அ-சி)

## கடந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டுள்ளனர். தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கொள்ளுப்பிட்டி, கொட்டாஞ்சேனை, மட்டக்குளி ஆகிய இடங்களில் இடம்பெற்ற தேடுதல்களிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் எனக் கூறப்படுகின்றது.

இதுதொடர்பாக கைதுசெய்யப்பட்டவர்களின் உறவினர்கள் சிலர் பிரதி அமைச்சர் இராதாகிருஸ்ணனிடம் முறையிட்டுள்ளனர்.

## லஸந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பினும் சந்தேக நபர் குறித்த விவரங்களை பொலிஸார் இதுவரை வெளிவிடவில்லை.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இம் மாதம் 8 ஆம் திகதி லஸந்த விக்கிரமதுங்க தெஹிவளையில் உள்ள - சந்தேநபர் கைதுசெய்யப்பட்ட அத்திடியப் பகுதியிலேயே படுகொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

## வடக்கு மோதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் சுதந்திர ஊடகங்களுக்கு எதிரான வன்முறைத் தாக்குதல்களை முடிவுக்கு கொண்டுவருமாறும் அந்த அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இஸ்ரேலிய இராணுவம் காஸா விடயத்தில் செயற்படுவதுபோல, ஊடகங்களும், மனிதாபிமான அமைப்புகளும் சுதந்திரமாக செயற்படுவதைத் தடுப்பதற்கு கொழும்பு அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மனிதாபிமானத் துயரம் மற்றும் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டனர் எனச் செய்திகள் வெளியாகும் தருணத்தில் இலங்கை அதிகாரிகள் ஊடகங்களை சுதந்திரமாக செயற்படுவதற்கு அனுமதி மறுக்கின்றனர் என்றும் ஊடக அமைப்பு குற்றம்சாட்டியுள்ளது.

இது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும், வதந்திகளைப் பரப்ப வழிவகுக்கும் என்றும் எல்லைகளற்ற பத்திரிகையாளர் அமைப்பு எச்சரித்துள்ளது. (சி)

## கடற்புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலி உறுப்பினர்கள் கடல்வழியாகத் தப்பிச் செல்லாதிருக்கும் வகையிலேயே இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன எனவும் அவர் கூறினார்.

இத்தாக்குதலில் படகிலிருந்த இரு புலி உறுப்பினர்களும் கொல்லப்பட்டுள்ளனர். இதனை அடுத்து அப்பகுதியில் கடற்படையினரால் சோதனை நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டது. அதேவேளை கடற்படையினரால் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலி உறுப்பினர்கள் கடல் வழியாகத் தப்பிச் செல்லாதிருக்கும் வகையிலேயே முல்லைத்தீவு கடற்பரப்பில் கடற்படையினரின் படகுகள் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தன. அதைத் தடுப்பதால் அவர்கள் தப்பிச் செல்வதற்கான வழி கிடைக்கும் எனும் பட்சத்திலேயே இந்த தாக்குதலை நடத்த புலிகள் முற்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## இராணுவத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்களின் அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு செய்யவும். இராணுவ நடவடிக்கைகள் மேற்பார்வையிடவும் பென்சேகா வன்னிக்கு வந்தார் என இராணுவத் தரப்பு தெரிவித்தது.

சரத் பொன்சேகா இப்பயணத்தின் போது விடுதலைப் புலிகளுக்கு எதிராக தாக்குதல் நடத்தி வரும் 57, 58, 59 ஆவது படை அணிகளின் தளபதிகள் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகளைச் சந்தித்து போர் உத்திகள் குறித்து ஆலோசனை நடத்தினார் என்றும் -

ஜனாதிபதியின் 48 மணிநேர போர் நிறுத்த அறிவிப்பு முடிவுக்கு வந்த பின்னர் முழுவீச்சில் தாக்குதலை நடத்த இராணுவம் திட்டமிட்டுள்ளது என்றும் அதுகுறித்த ஆலோசனைகளை வழங்கவே பொன்சேகா போர்முனைக்குச் சென்றனார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-சி)

## மனிதாபிமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிந்தப்படுவதையும் தடுப்பதற்கு அனைத்தையும் செய்யவேண்டும்.

இதன் காரணமாக பொதுமக்கள் மோதல் நடைபெறும் பகுதிகளில் இருந்து வெளியேறுவதற்காக மோதல் நிறுத்தம் ஒன்றிற்கு இணங்கவேண்டுமென சம்பந்தப்பட்ட தரப்புகளை நான் வலியுறுத்துகின்றேன்.

பல பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். காயமடைந்த நூற்றுக்கணக்கானவர்களுக்கு போதிய மருத்துவ உதவிகள் மறுக்கப்பட்டுள்ளன.

உலக உணவுத்திட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட உணவுத் தொடரணிகளுக்கும் மருத்துவ பணியாளர்கள் மற்றும் உயிர் காக்கும் மருத்துகள் கிடைப்பதற்குமே மிகவும் முன்னுரிமையளிக்கப்பட வேண்டும்.

மருத்துவமனைகளும், மருத்துவ நிலையங்களும் மதிக்கப்படவேண்டும். இதேவேளை அவசர மருத்துவ சிகிச்சை தேவைப்படும் மக்களை வெளியேற்றுவது மிக முக்கியமானது.

மோதலில் சிக்கியுள்ள மக்கள் தஞ்சமடைவதற்கு எந்த இடமும் இல்லை. தப்புவதற்கும் வழியில்லை. அம்புலன்ஸ்களும் மருத்துவ மனைகளும் ஷெல் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன. (சி)

## அரசாங்கத்தின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டிருப்பவை வருமாறு:-

இலங்கை அரசு 48 மணி நேரப் போர்நிறுத்தம் அறிவித்திருப்பதாக ஊடகங்கள் ஊடாகச் செய்திகளை வெளியிட்டிருந்தது. ஆனால் இன்றும் (வெள்ளியன்றும்) வழமைபோலவே பொதுமக்கள் குடியிருப்புகள், சந்தைகள், மருத்துவமனைகள், தொண்டு நிறுவனங்கள் எனப் பாராது கண்மூடித்தனமான பீரங்கித் தாக்குதல்களைப் படையினர் நடத்தி வருகின்றனர்.

இன்றும்(வெள்ளியன்றும்) கூட அரச படையினரின் கொடூரமான தாக்குதல்கள் காரணமாகக் குழந்தைகள், பெண்கள் உட்பட 28 பேர் வரை கொல்லப்பட்டும் 60 இற்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்தும் உள்ளனர். தொடர்ந்தும் படையினர் கண்மூடித்தனமான பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்ட வண்ணம் உள்ளனர்.

எனவே, இந்த அறிவிப்பானது உலகத்தை ஏமாற்றுவதற்கும் தமிழகத்தின் ஏழு கோடி தொப்புள் கொடி உறவுகளின் எழுச்சியை மழுங்கடிப்பதற்குமான சூழ்ச்சியின் வெளிப்பாடாகவே நாம் பார்க்கின்றோம்.

போர்நிறுத்தம் என்று அரசு அறிவித்த போதிலும் இன்றும் தொடர்ச்சியாக உடையார்கட்டுப் பிரதேசத்தில் அமைந்துள்ள உலக கத்தோலிக்க திருச்சபையின் தொண்டு நிறுவனமான 'கியூடெக்' நிறுவனத்தின் மீதும் படையினர் பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டதனால் அங்குள்ள உணவுக் களஞ்சியங்கள் எரிந்தவண்ணம் உள்ளன.

அத்துடன், புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு நிலைகொண்டுள்ள புதுக்குடியிருப்பு மருத்துவமனையை அண்மித்த பிரதேசங்களிலும் தொடர்ச்சியான பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்ட வண்ணமே உள்ளன. இதனால் அங்குள்ள நோயாளர்கள், மருத்துவர்கள் மிகவும் அச்சமும் பதற்றமும் அடைந்த நிலையில் உள்ளனர்.

அனைத்துலக சமூகத்தின் ஒத்துழைப்போடு ஏற்படுத்தப்படுகின்ற நிரந்தரமான போர்நிறுத்தமும் அதனுடன் கூடிய அரசியல் பேச்சுகளுமே தமிழ் மக்களின் இன்னப்பிரச் சினைக்குத் தீர்வினை ஏற்படுத்தும் என்று தமிழ் மக்களும் விடுதலைப் புலிகளும் நம்புகின்றனர் - என்று தெரிவித்துள்ளார் நடேசன். (அ-சி)

வெற்றி இலக்கு-1
பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்கள்.
தரம் 5, 4, 3, 2, 1
01.02.2009 இல் வெளிவருகிறது வினாத்தாள்கள் தேவைப்படும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உடன் பதிவு செய்து பெற்றுக்கொள்ளவும்.
தயா அச்சகம்
இல: 138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (மனோகரா சந்தி)

புதுக் கடைத் திறப்பு விழா
(31.01.2009)
TVS, HERO STREAM மற்றும்
சகலவிதமான மோட்டார் சைக்கிள்
உதிரிப்பாகங்களை எம்மிடம் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
அன்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவரையும் அன்போடு
அழைக்கின்றோம்.
உரிமையாளர்,
பி.என்.பி மோட்டோர்ஸ்,
133, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



சிங்களம், ஆங்கில வகுப்புக்கள்
(பேச்சு மொழி, எழுத்து மொழி இரண்டு)
குறிப்பு:- மாணவருக்கு வேறாகவும் மற்றையோருக்கு வேறாகவும் வகுப்புக்கள் நடைபெறும்.
ஆரம்பம்:- 01.02.2009 ஞாயிற்றுக்கிழமை
பி.ப 4மணிக்கு- மாணவருக்கு
பி.ப 5மணிக்கு- மற்றையோருக்கு
பி.ப 1மணிக்கு- மாணவருக்கு
பி.ப 2மணிக்கு- மற்றையோருக்கு
இடம்
தலைமையகம்
கிளை: 65, குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
(பல்கலைக்கழகம் முன்பாக)
திரு. க. துரைராஜா,
இளைப்பாறிய மேலதிக அரச அதிபர்
மொழி மையம்
மதவடி ஒழுங்கை, சுதுமலை வடக்கு, மானிப்பாய்
2214770, 077 1728348

தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் - 2009
(நாவலர் வெளியீடு)
பயிற்சிப் பரீட்சை - 5
நாளை (ஞாயிறு) இருநேரங்களில்
காலை 9.00 மாலை 2.00 மணி
★ விரும்பிய நேரங்களில் வெளி மாணவர்களும் தோற்றலாம்.
தரம் 4 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் 2010
(நாவலர் வெளியீடு)
1ஆவது பயிற்சிப் பரீட்சை
நாளை (ஞாயிறு) காலை 9.00 மணி
★ அனுமதிகளை இன்று முதல் பெறவும்
நாவலர் இன்ஸ்ரிரியூட்
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.01.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org